லஞ்ச ஊழல் விழிப்புணர்வு ®

# மக்கள் விசாரணை

ஆண்டு-6 இதழ்-4 செப்டம்பர்-2017 மாதஇதழ் விலை ₹ 10/-

makkalvisaranai@facebook twitter



## ஒரு உறையில் இரண்டு கத்திகள்



H. Sivaraman
80721 81052
A. Balachandar
98840 30705
Excellant India Green Frog Pvt. Ltd.
Excellant India Green Frog Pvt. Ltd.,
MANUFACTURE, SALES & EXPORT
Frogs drink and breathe through their skin. They have thin, moist skin that gases can easily penetrate. Although frogs have lungs, they depend on additional oxygen absorbed through their skin, especially when swimming underwater.
Frogs are the only amphibians without a tail. Their scientific order, Anura, means "tailless" in Ancient Greek.
Their eardrums are located outside their bodies, just behind their eyes.
Frogs have exceptional night vision and are highly sensitive to movement. Their bulging eyes, which sit high on their heads, allow them to see in almost all directions.
Frogs rely on their eyes to swallow food. They push meals down their throats by sinking their eyes down, into their skulls, which applies pressure on the roof of their mouths.
Transparent inner eyelids, known as nictitating membranes, protect their eyes when swimming underwater.
Most male frogs possess vocal sacs, flexible membrane pouches that, when filled with air, amplify calls they make to attract potential mates.
Frog skin can be bumpy. Some of these bumps are mucous glands which lubricate the skin, or granular glands which produce poisons to protect them from predators.
Coloring is determined by chromatophores, pigment-containing cells that are layered in the skin. By manipulating and moving dark pigment found in certain cells, many frog species can adjust the brightness of their skin.
Webbed feet help frogs swim by pushing water away, propelling them faster through the water.
Off : 3/425, O.M.R. Kazhipattur- 603 103.
Kancheepuram District. Tamilnadu.
Email : eifindia2017@gmail.com

## தலையங்கம்

அன்பாய்
அனைவரும்
ஒன்றிடுவோம்
பண்பால் உயர்ந்து
பயன்பெறுவோம்
தெம்பாய் உலகை
எதிர்கொள்வோம்
துன்பங்கள் யாவையும்
வென்றிடுவோம்
எங்கும் நிறை இறைவனை
போற்றிடுவோம்
இன்பங்கள் யாவையும்
பெற்றிடுவோம்

# பதவி சண்டையால் பரிதவிக்கும் தமிழகம்?

தேங்கும் நன்னீரில் பெருகும் கொசுக் களே டெங்கு நோய்ப் பரவ லுக்கான காரணம். எனவே, நீர் பராமரிப்பு நடவ டிக்கை களில் உரிய கவனம் செலுத்தினால் மட்டுமே டெங்கு நோய்ப் பரவலைத் தடுத்து நிறுத்த முடியும். வீடுகளில் பாதுகாப்பான முறையில் நீரை பராமரிக் காததால்தான் கோடைக் காலத்திலும்கூட கொசுக்கள் உற்பத்தியாகி, டெங்கு பரவுகிறது என்று சுகா தாரத் துறை அதிகாரிகள் தெரிவித்திருக் கிறார்கள்.

ஆனால், நீரை பாது காப்பான முறையில் பரா மரிப்பது தனி நபர்களின் பொறுப்பு மட்டுமல்ல. ஊராட்சி, நகராட்சி, மாநக ராட்சி என்று உள்ளாட்சி அமைப்புகளுக்கும் அதில் பெரும் பங்கு இருக்கிறது.

உள்ளாட்சித் தேர்தல் உரிய காலத்தில் நடத்தப்படா மல் பொறுப்பு அலுவலர்களாலேயே உள்ளாட்சி அமைப்பு கள் நிர்வகிக்கப் பட்டுவரும் நிலையில், டெங்கு நோய் அதிகரித்திருப்பது அவர்களின் நிர்வாகத் திறனின்மையின் ஒரு அடையாளமாகவே இருக்கிறது. டெங்குவை எதிர் கொள்வது என்பது வெறும் நோய்த்தடுப்பு நடவடிக்கை மட்டுமல்ல, நகரமைப்புத் திட்டங்களில் சுகாதார அம்சங் களுக்கு உரிய கவனம் செலுத்தினால் மட்டும்தான் டெங்கு உள்ளிட்ட பல்வேறு நோய்கள் பரவாமல் தடுக்க முடியும்.

கடந்த வாரத்தில், தமிழகம் முழுவதும் 8,000-க்கும் மேற்பட்டவர்கள் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு அரசு மற்றும் தனியார் மருத்துவ மனைகளில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டி ருக்கிறார்கள். வழக்கமான காய்ச் சலுக்காக மருத்துவ மனையில் தங்கி சிகிச்சை பெறும் எண்ணிக்கையைக் காட்டிலும் இது இரண்டு மடங்கு அதிகம். புறநோயாளிகளா கச் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை இதைக் காட்டிலும் இன்னும் அதிகமாக இருக்கும். இவ்வளவு மோசமான சூழ்நிலையில், தமிழக அரசு என்ன செய்துகொண்டி ருக்கிறது என்று பார்க்கும் போது, வேதனையே மிஞ்சுகிறது.

2013-ம் ஆண்டு முழுமைக்கும் 6,000-க்கும் மேற்பட் டவர்கள் தமிழ்நாட்டில் டெங்குவால் பாதிக்கப்பட்டி ருந்தார்கள். ஆனால், இந்த ஆண்டு ஆகஸ்ட் 13-ம் தேதிக்குள் டெங்குவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 6,500-ஐ தாண்டிவிட்டது. சேலம், ஈரோடு, கோயம் புத்தூர், தஞ்சாவூர், கன்னியாகுமரி ஆகிய மாவட் டங்களில் அதிக அளவில் டெங்குவால் பாதிக்கப்பட்டி ருக்கிறார்கள். தமிழ்நாடு, கேரளம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் டெங்குவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை, இந்திய அளவில் 80%-ஐ தாண்டிவிட்டது. வழக்கமாக மழைக் காலங்களில் மட்டுமே டெங்கு நோய் பரவும். ஆனால், கடும் வறட்சி நிலவிய இந்த ஆண்டிலும் கூட டெங்கு அதிக அளவில் பரவியிருக்கிறது.

டெங்கு காய்ச்சல் பரவலைத் தடுப்பதற்கும் சிகிச்சை அளிப்பதற்கும் தமிழக அரசு தீவிரமாக செயலாற்ற வேண் டிய தருணமிது. கட்சியைக் கைப்பற்றுவது, ஆட்சியைப் பாதுகாப்பது என அரசியல் களத்தில் கவனம் செலுத்திக் கொண்டிருக்கும் அதிமுக அரசு, மக்களின் உயிர் காக்கும் நோய்த் தடுப்பு நடவடிக்கைகளில் அலட்சியம் காட்டி வருவது மிகவும் ஆபத்தானது. அதிலும், நோய்த் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதைவிட தமிழக சுகாதாரத் துறை, உயிரிழப்புகளுக்கு டெங்கு காரணம் இல்லை என்று மறைப்பதிலேயே குறியாக இருக் கிறது. டெங்கு தொடர் பான உண்மையை மறைப்பதால், அதைக் கட்டுப்படுத்தி விட முடியுமா?

தமிழக அரசு இனியாவது மக்களின் உயிரோடு விளை யாடாமல் உடனடி நடவடிக்கைகளை எடுத்தாக வேண்டும், இல்லை யென்றால் மக்கள் வரும் சட்ட மன்ற தேர்தலில் தங்களின் கோபத்தைக் காட்ட தயாராகி விடுவார்கள்.

**- ஆ. மவுரியன்,**
**ஆசிரியர்**

ஊழலாட்சி என்று விமர்சித்த ஓபிஎஸ் ஸுடன் கை குலுக்கியிருக்கிறார் முதல்வர் பழனிசாமி. இதனை எதிரியையும் அரவணைக்கும் பாணி அல்லது, எதிரிக்கு எதிரி நண்பன் என்று சொல்லலாம். எப்படிப் பார்த்தாலும் கட்சி, ஆட்சியில் இரட்டை அதிகார மையங்களை உருவாக்கியிருக்கிறார் முதல்வர்.

இனி கட்சி, ஆட்சியின் முக்கிய முடிவுகள் அனைத்திலும் ஈபிஎஸ், ஓபிஎஸ் என்ற இருவருடைய பங்களிப்பையும் தவிர்க்க முடியாது. அந்த முடிவுகள் பரஸ்பரம் பலன் தரும்வரை பிரச்சினையில்லை. மாச்சரியங்கள் உருவானால், மனமாற்றங்கள் உருவாகும். கட்சியும் ஆட்சியும் ஒருவரிடமே இருக்க வேண்டும் என்று அறைகூவல் எழுப்புபவர்கள் பலரைக் கொண்ட கட்சி அதிமுக. அப்படியொரு குரல் எழுந்தால், அது ஆட்சி மாற்றத்துக்கும் அழைத்துச்செல்லும். அதைத் தவிர்க்க வேண்டிய பெரும்சவால் முதல்வருக்கு முன்னால் இருக்கிறது.

'எங்கள் எம்.எல்.ஏ.க்கள் எதிரணிக்குள் ஸ்லீப்பர்செல்களாக இருக்கிறார்கள்' என்ற தினகரனின் கூற்றை முதல்வர் பழனிசாமி எளிதாகக் கடந்துவிட முடியாது. தன் வசம் 19 எம்.எல்.ஏ.க்கள் இருப்பதைப் பகிரங்கமாகக் காட்டிவிட்டார் தினகரன். இன்னும் ஓரிருவர் வெளியே வந்தால் அது ஆட்சிக்கான ஆபத்து.

ஸ்லீப்பர்செல்களின் அடியொற்றி, வேறு சில அதிருப்தி எம்.எல்.ஏ.க்கள் தினகரன் பக்கம் நகர்ந்து, அவர்கள் எடப்பாடி அரசுக்கு அளித்துவந்த ஆதரவைத் திரும்பப்பெறுவதாக ஆளுநரிடம் முறைப்படி அறிவித்தால், எடப்பாடி அரசு எப்போது வேண்டுமானா



# ஒரு உறையில் இரண்டு கத்திகள்

## தாங்குமா தமிழகம்?

லும் பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டி வரும். அந்த 'எப்போது' என்பதை டெல்லி முடிவுசெய்யும் என்பது வெளிப்படை. ஆக, அதிருப்தி உருவாகாமல், ஸ்லீப்பர்செல்கள் விழித்துவிடாமல் பார்த்துக்கொள்வது முதல் வரின் முன்னால் இருக்கும் மற்றொரு சவால்.

அதிமுக அணிகள் இணைந்த பிறகு பதவி யேற்கும் புதிய அமைச்சர்களில் செம்மலை முக்கியமானவராக இருப்பார் என்றுதான் பலரும் கணித்தனர். ஆனால், அந்தக் கணிப் பைத் தகர்த்துவிட்டார் பழனிசாமி. அதன் மூலம் அமைச்சரவைக்குள் அதிருப்தி உருவாகி யிருப்பது கண்கூடு. கூடவே, மூத்த அமைச் சர்கள் செங்கோட்டையன், ஜெயக்குமார் முதல் புதியவர்களான உடுமலை ராதாகிருஷ் ணன், சேவூர் ராமச்சந்திரன் வரை பலரது முக்கியத் துறைகள் மாற்றப்பட்டிருப்பது அமைச்சரவைக்குள் சலசலப்பை ஏற்படுத்தி யுள்ளது.

இந்த அதிருப்திகளும் சலசலப்புகளும் விரி வடையாமல் தடுத்து நிறுத்துவதே முதல்வ ருக்கு இருக்கும் முதல் சவால். அதேபோல, மாநில, மாவட்டப் பொறுப்புகள், வாரியப் பதவிகளுக்காகக் காத்திருக்கும் எம்.எல்.ஏ.க் களும் முதல்வருக்கான சவால்களாகவே இருப் பார்கள். என்ன ஒன்று, அவர்கள் வெளியேறும் போது வெறுமனே செல்ல மாட்டார்கள். சசிகலாவை யும் தினகரனையும் காரணமாகச் சொல்லிவிட்டு அவர்கள் பக்கம் செல்வார்கள். அதுதான் சிக்கல்.

அதிமுகவில் இரட்டைத் தலைமை கூடாது, கட்சியும் ஆட்சியும் ஒருவரிடமே இருக்க வேண்டும். இந்த அரசியல் வாக்கியம்தான் ஓ.பன்னீர்செல்வத்தின் முதல்வர் பதவிக்கு உலை வைத்தது. அதுவே சசிகலாவின் வழியாக எடப்பாடி பழனிசாமியை முதல்வராக்கியது.

தற்போது கட்சி, ஆட்சி இரண்டிலுமே இரட்டைத் தலைமை உருவாகியிருக்கிறது. ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப் பாளர் என்று அறிவித்துக்கொண்டிருக்கும் எடப்பாடி பழனிசாமியும் ஓ.பன்னீர் செல்வ மும் முறையே முதல்வராகவும் துணை முதல் வராகவும் தொடர்கிறார்கள். இன்றைக்கு சசிகலாவையும் தினகரனையும் காட்டித் துணை முதல்வர் பதவியைப் பெற்றுள்ள ஓபிஎஸ், கடைசிவரை துணை முதல்வராக மட்டுமே நீடிப்பார் என்று சொல்ல முடியாது. மூன்று முறை முதல்வராக இருந்தவர், மக்கள் மத்தியில் ஓரளவு செல்வாக்கு பெற்றவர் என்ற முறையில் கட்சியிலும் ஆட்சியிலும் தனது ஆளுமையை விரிவுபடுத்த முதல்வர் பதவியைக்கூடக் கேட்கக் கூடும்.

முழுமையாக இல்லாவிட்டாலும், சுழற்சி முறையிலேனும் பகிர்ந்தளிக்கக் கோரலாம். அதற்கு டெல்லியின் ஆதரவு கிடைத்தால், அதைச் செய்துதர வேண்டிய நெருக்கடி முதல்வருக்கு வரலாம். அந்தக் கோரிக்கையை நிறைவேற்றத் துணிந்தாலும் தவறினாலும் அது முதல்வர் எடப்பாடி பழனிசாமிக்கு சிக்கலையே தரும். இந்த இடத்தில், துணை முதல்வராக பதவியேற்ற கையோடு ஓபிஎஸ்ஸுக்கு வந்த மோடியின் வாழ்த்தைக் கவனத்தில் எடுத்துக்கொள்வது பொருத்தம்.

இரட்டை இலையை மீட்டெடுக்க அணிகள் இணைப்பு காலத்தின் கட்டாயம். அதையே ஈபிஎஸ் ஸும் ஓபிஎஸ்ஸும் செய் திருக்கிறார்கள். ஆனால், அது மட்டுமே போதாது. முக்கியமாக, டெல்லி மனது வைக்க வேண்டும். ஆம், சமீபத்திய சமாஜ்வாதி சர்ச் சையின் படி பார்த்தால், இரட்டை இலை எடப்பாடி - ஓபிஎஸ் இணைந்த அணிக்கே கிடைக்க வேண்டும். அதுதான் அளவுகோல் என்றால் ஆர்.கே.நகர் இடைத் தேர்தலின் போதே இரட்டை இலை சசிகலா அணிக்குக் கிடைத்திருக்க வேண்டும்.

ஆனால், அதைத் தேர்தல் ஆணையம் செய்யவில்லை. ஆக, இப்போதும்கூட சின்னம் தேர்தல் ஆணையம் கைகளில்தான் இருக்கிறது. எனவே, இரட்டை இலை இல்லாத தேர்தல் தான் அதிமுகவை எளிதாகக் கையாள உதவும். முக்கியமாக, தாமரைச் சின்னத்தைத் தமிழகத் தின் மூலை முடுக்குகளில் எல்லாம் கொண்டு சேர்க்க உதவும் என்று 'டெல்லி' கணக்குப் போடும் பட்சத்தில், இரட்டை இலை மீட்பு கானல் நீர்தான்.

**தமிழகத்தில் நடக்கும் ஆட்சியின் இரட்டைத் தலைமை என்பது ஒரு உறையில் இரண்டு கத்திகள் கதைதான் நினைவுக்கு வருகிறது.**

**- ஆ. மவுரியன்**

இந்தியாவின் இரண்டாவது மிகப் பெரிய ஆறு கங்கை. ஓடும் தொலைவில் உலகின் மூன்றாவது மிகப் பெரிய ஆறு. உத்தரகாண்ட் மாநிலத்தில் மேற்கு இமயமலையில் தொடங்கி வங்காள விரிகுடா கடலில் சென்று கலக்கிறது. கங்கை இந்தியா மட்டுமல்லாது வங்க தேசத்திலும் பாய்கிறது. இது இந்து மதத்தின் புனித ஆறாக பாவிக்கப்படுகிறது.

பாவங்களைக் கழுவும் புண்ணிய நதி என்ற தொன்ம நம்பிக்கையும் உண்டு. இதனால் இந்தியா முழுவதிலுமிருந்து லட்சக்கணக்கான மக்கள் கங்கை கரைக்கு வருகிறார்கள். இங்கே வந்து உயிர் துறந்தால் மோட்சம் கிட்டும் என்ற நம்பிக்கையும் இருக்கிறது. இறந்த உடல்களைக் கங்கையில் மிதக்கவிடும் கலாச்சாரமும் உண்டு. இந்த அம்சங்களால் அதிகமாக அசுத்தமாகும் ஆறாகவும் கங்கை இருக்கிறது.

கங்கையைச் சுத்தப்படுத்த மத்திய அரசு இரு ஆண்டுகளுக்கு முன்பு முடிவெடுத்தது. அதன் ஒரு பகுதியாக கங்கைக் கரையின் படித்துறைகளை மறு கட்டமைப்புச் செய்யும் உத்தேசத் திட்டம் இப்போது வெளியாகியிருக்கிறது. டெல்லியைச் சேர்ந்த போர்போஜெனஸிஸ் என்னும் நிறுவனம் இந்தத் திட்ட வரைவை வெளியிட்டுள்ளது. படித்துறை, தகனம் செய்யும் பகுதி ஆகியவற்றை மாற்றியமைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இந்தத் திட்டத்துக்கு ‘ரிவர் இன் நீட்’ (River in need) எனப் பெயரிடப்பட்டுள்ளது. 210 கிலோ மீட்டர் தொலைவுக்கு தகனத்துக்கான மேடையும் படித்துறைகளும் உருவாக்கப்படவுள்ளன. இந்துக்களின் கலாச்சாரப் பண்பாட்டை உணர்ந்து இந்தத் திட்டத்தை உருவாக்கியிருப்பதாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது. அலகாபாத்துக்கும் வாரணாசிக்கும் இடையில் இதுபோல 30 படித்துறைகளும் 20 தகன மேடைகளும் உருவாக்கப்படவுள்ளன. கிட்டத்தட்ட பணிகள் துவங்கியுள்ள நிலையில் ஆமை வேகத்திலே இயங்குகிறது என்பதுதான் நிஜம்.

- வடிவேல்

### மோடியின் அறிவிப்பால்

# புண்ணிய நதி சுத்தமாகிவிட்டதா?



# படுமோசமாகி வரும் குடிநோயாளிகள் நிலை..!




உலகளாவிய மதுத் தரத்தை தமிழக குடிநோயாளிகள் பக்கத்தில்கூட நெருங்க முடியாது. இந்திய மதுத்தரம் (Indian standard alcohol specifications) என்று ஒன்று உண்டு. என்னென்ன விகிதாச்சாரத்தில் பொருட்களைக் கலந்து எப்படி மதுவைத் தயாரிக்க வேண்டும் என்பது குறித் தெல்லாம் வரையறுக்கப்பட்ட ஒரு கணக்கு இருக்கிறது.




மதுவுக்கு மட்டுமின்றி, மது அடைக்கப்படும் பாட்டில்களின் தடிமன், பாட்டில் மூடி மற்றும் கார்க்கின் தடிமன், இவை எல்லாவற்றுக் கும் ஐ.எஸ்.ஓ. அமைப்பு (ஐ.எஸ் - 4450/2005) தரம் நிர்ணயித் துள்ளது. மது பாட்டில்களுக்கு எடை தாங்கும் பரிசோதனை, வெப்பக் கதிர்வீச்சு பரிசோதனை செய்யப்பட வேண்டும்.

தமிழகத்தில் 12 மதுபான ஆலைகள், 7 பீர் ஆலைகள் இருக்கின்றன. இவை ஆண்டுக்கு 54 கோடி லிட்டர் மது, 25 கோடி லிட்டர் பீர் உற்பத்தி செய்கின்றன. கடந்த மூன்று ஆண்டுகளில் படிப்படியாக 4,125 கடைகள் மூடப்பட்ட நிலையிலும் இவற்றின் உற்பத்தி குறைக்கப் படவில்லை. அதேசமயம், மதுபான விற்பனையும் குறையவில்லை.

நெடுஞ்சாலைகளில் இருந்த 1,750 கடைகள் மூடப்பட்டபோது கடந்த மே மற்றும் ஜூன் மாதங்களில் மட்டும் 12 % விற்பனை குறைந் தது. ஆனால், தற்போது தினமும் சராசரியாக 65 கோடி ரூபாய்க்கு கல்லா கட்டுகிறது டாஸ் மாக் நிர்வாகம். இது பழைய உச்சபட்ச விற் பனையே என்கின்றனர் டாஸ்மாக் ஊழியர்கள்.

இவ்வளவு கடைகளை மூடிய பிறகும் பழைய விற்பனை தொடர்வது ஏன்? என்று டாஸ்மாக் பணியாளர்கள் சங்கம் ஏ.ஐ.டி.யூ.சி. பொதுச் செயலாளர் தனசேகரனிடம் கேட்டோம். "டாஸ்மாக்கில் ஆண்டுக்கு ரூ.35 ஆயிரம் கோடிக்கு விற்பனை என்பது பிரதான குடிகாரர் களை மட்டுமே நம்பியிருக்கிறது.

எப்போதாவது மது அருந்துபவர்களை சார்ந்து இல்லை என்பது இதன்மூலம் நிரூபண மாகியிருக்கிறது. அதேசமயம், தமிழகத்தில் குடிநோயாளிகள் எண்ணிக்கை அதிகரித்து வருவதையும் இது காட்டுகிறது. ஆபத்தான

இந்தப் போக்கு மாறவேண்டுமானால் சமூக அளவில் குடிநோய் மற்றும் அதன் பாதிப்புகள் குறித்து விழிப்புணர்வு ஏற்பட வேண்டும் அல்லது அனைத்து மதுக்கடைகளையும் அரசு மூடவேண்டும்." என்றார் அவர்.

தமிழக குடிநோயாளிகளிடம் அண்மைக் காலமாக நிலவும் பெரும் சந்தேகம் இது. "முன்னை போல இல்லப்பா, இப்ப எல்லாம் ஒருமுறை குடிச்சா திரும்பத் திரும்பக் குடிக்கச் சொல்லுது. தினமும் ஏழெட்டு குவாட்டராச்சும் ஓடிடுதுப்பா. போதையும் பெருசா இல்லை. சரக்குல வேறு எதையோ கலக்குறாங்க..." என்கிறார்கள். அவர்கள் சொல்வதற்கேற்ப, அனைத்து மதுக்கடைகளும் இப்போது, உண்டு உறைவிட குடி மையங்களைப் போல ஆகிவிட்டன. அதிகாலை 6 மணிக்கு பாரில் பிளாக்கில் மது வாங்கிக் குடிப்பதில் தொடங்கும் இவர்களின் குடிப் பழக்கம் இரவு வரை நீடிக்கிறது.



நண்பர்களிடம் காசு வாங்குவது, சின்னதாய் கூலிவேலைசெய்து சம்பாதிப்பது, மதுக்கடைக்கு வருவோரிடம் கையேந்துவது, வண்டியை துடைத்து விட்டு காசு கேட்பது, பாட்டில் பொறுக்கி விற்பது, பாரில் சப்ளையராகச் சேர்ந்து சம்பாதித்தபடி மது அருந்துவது உட்பட பல்வேறு வகையில் மதுக்கடை களின் வாசலிலேயே சிலர் முழுநேர குடிநோயாளிகளாக தேங்கிக் கிடக்கிறார்கள். இதில் பெண்களும் சிறுவர்களும் அடக்கம். இரவு நேரங்களில் இவர்கள் பாலியல் பலாத்காரம் செய்யப்படுகிறார்கள். சிலர் தாங்களாகவே பாலியல் தொழிலில் ஈடுபடுகிறார்கள். நகர்ப்புறங்களுக்கு இணையாக கிராமப்புறங்களிலும் இதே பாணியிலான குடிநோயாளிகள் அதிகரித்து விட்டார்கள்.

தமிழகத்திலிருந்த 6,826 மதுக்கடைகள் தற்போது 2,741 கடைகளாக சுருங்கியிருக்கிறது. இருந்தாலும் மது விற்பனையில் எந்த மாற்றமும் இல்லை. அதேசமயம், மதுவின் தரம் நாளுக்கு நாள் படுமோசமாகி வருவதால் குடி தொடர்பான நோய்களும் அடிமைத்தனமும் அதிகரித்து வருகிறது. உலக நாடுகள் உணவுப் பொருட்களிலிருந்து மட்டுமே மதுவை உற்பத்தி செய்கின்றன.

பனை - தென்னை கள், பழங்கள், தானியங்கள், காளான், புற்கள், தேன் மற்றும் பூக்களில் இருந்து மதுவை தயாரிக்கிறார்கள். ரஷ்யாவின் வோட்காவை உருளைக் கிழங்கிலிருந்தும், ஸ்காட்லாந்தின் ஸ்காட்ச்சை கோதுமை, மக்காச் சோளத்திலிருந்தும், சீனாவின் மவுத்தாய் மற்றும் ஜப்பானின் சாக்கேவை அரிசியிலிருந்தும், ஃபிரான்ஸின் ஷாம்பெயினை திராட்சையிலிருந்தும், கோவாவின் ஃபென்னியை முந்திரியிலிருந்தும் தயாரிக்கிறார்கள்.

இந்தோனேஷியா, இலங்கை, ஃபிலிப்பைன்ஸ்ஆகிய நாடுகளில் தென்னை, பனை பொருட்களிலிருந்தும் மது தயாரிக்கிறார்கள். ஆனால், இந்தியாவில் மகாராஷ்டிரா, புனே, கோவா உள்ளிட்ட ஒரு சில இடங்கள் நீங்கலாக அனைத்து மாநிலங்களிலும் கரும்புக் கழிவான மொசஸே மது தயாரிப்புக்கான பிரதான மூலப் பொருளாகப் பயன்படுத்தப்படுகிறது.

ஆனால், தமிழகத்தில் இந்த நடைமுறைகள் எல்லாம் கண் துடைப்புக்காக மட்டுமே நடக்கின்றன. இங்கு மதுவை உற்பத்தி செய்வது அரசியல் செல்வாக்கு கொண்ட நபர்களே. அதனால், பெரும்பாலான விதி முறைகள் மீறப்படுகின்றன. பெரும்பாலான ஆலைகளில், பரிசோதனைக்கு அனுப்பப்படும் அந்த ஒரு லிட்டர் மதுவை மட்டுமே சரியான தரத்துக்கு தயாரித்து அனுப்பி சான்றிதழ் பெறுகிறார்கள். சில ஆலைகளில் அதுவும் கிடையாது. சாராயம் காய்ச்சுவதுபோல அப்படியே காய்ச்சி பாட்டிலில் நிரப்புகிறார்கள். விலை குறைவான மது ரகங்களில் பாட்டிலை கழுவுவதுகூட கிடையாது. அதனால்தான் மது பாட்டிலுக்குள் கரப்பான் பூச்சி, பல்லி எல்லாம் மிதக்கின்றன.

தோசை மாவு, தயிர், ரொட்டி போன்று நொதிக்க வைத்துத் தயாரிப்பதுதான் மதுவும். ஆனால், தமிழகத்தில் குடிநோயாளிகள் குடிப்பது கொதித்த பின்பு கிடைக்கும் எரி சாராயத்தைத்தான். முன்பை விட, மனம் மற்றும் உடல் சார்ந்த நோய்கள் அதிகரித் ததற்கும் குடிநோயால் ஏற்படும் மரண விகிதங்கள் அதிகரித்ததற்கும் இதுவே முக்கியக் காரணம்!

- கே.ரமேஷ்குமார்

# மழை நீரை சேகரிக்க அரசு தவறியதா?

வருடத்தின் நீண்ட வறட்சியை சந்தித்து வருகிறது தமிழகம். 300க்கும் மேற்பட்ட விவசாயிகளின் தற்கொலை இதன் சாட்சி. தற்போது குடிநீருக்காக வீதிகளில் காத்திருக்கும் குடங்கள் அதன் வெளிப்படையான காட்சி. சென்னையும் தப்பவில்லை.

கல்குவாரி தண்ணீரை கொண்டு வந்தும் தாகம் தீர்க்க முடியவில்லை. யாரை குறை சொல்லி என்ன நடந்துவிடப்போகிறது? மழை பெய்ய பிரார்த்தனைகள் தமிழகம் முழுவதும் நடக்கிறது. ஆங்காங்கே மழை பெய்யத் தொடங்கியிருக்கிறது. சென்னையிலும் சில இடங்களில் மழை பெய்து வருகிறது. ஆனால் மழை தண்ணீரை சேகரிக்கக்கூடிய கட்டமைப்பு முறையாக பராமரிக்கப்பட்டு வருகிறதா என்றால் சந்தேகம் தான்.

2001ல் மழை நீர் சேகரிப்பு திட்டம் தமிழகத்தில் அனைத்து வீடுகளுக்கும் கட்டாயமாக்கப்பட்டது. நிலத்தடி நீர்மட்டம் கணிசமான அளவு உயர்ந்து நல்ல பலனை கொடுத்தது. அதன்பின் அதிகாரிகள் கண்காணிக்கத் தவறியதன் விளைவை தற்போது நாம் அனுபவித்து வருகிறோம். ஏரி, குளம், கால்வாய்கள் கூட தூர்வாரப்படவில்லை. ஆண்டு தோறும் கோடை காலமான ஏப்ரல், மே மாதம் இதை செய்வது வழக்கம்.

ஆனால் பல வருடங்களாக அந்த பராமரிப்பு பணியை செய்யும் வழக்கத்தை அதிகாரிகள் மறந்து விட்டார்கள். அதனால் தமிழகத்தில் நிலத்தடி நீருக்கும் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மத்திய நிலத்தடி நீர் வாரியம் ஆண்டு தோறும் 4 முறை நிலத்தடி நீர் அளவை ஒவ்வொரு மண்டலம் வாரியாக ஆய்வு செய்து வருகிறது. தற்போது பெய்து வரும் மழை நீரை சேமிக்க தவற விட்டுவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும்.

மத்திய அரசு சார்பில் தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டுள்ள 536 கிணறுகளில் இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளது. இந்த ஆண்டு பருவ மழை தொடங்குவதற்கு முன் எடுக்கப்பட்ட ஆய்வு மத்திய அரசுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

தேசிய அளவில் நிலத்தடி நீர் மட்டம் சரிவு 61 சதவீதமாக உள்ளது. ஆனால் தமிழ்நாட்டில் 87 சதவீதமாக உயர்ந்துள்ளது. குறிப்பாக 465 கிணறுகளில் மிகமோசமான அளவு நீர்மட்டம் சரிந்துள்ளது. கணக்கீட்டை பார்க்கும் போது நாட்டிலேயே வறட்சியால் மிகவும் பாதிக்கப்பட்ட மாநிலம் தமிழகம்தான் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

பருவ மழை பெய்து வரும் இந்த நேரத்தில் மழை நீரை சேகரித்து வைக்க வேண்டிய கட்டாயம் தமிழகத்திற்கு ஏற்பட்டுள்ளது. எனவே தண்ணீரை சேகரிக்கும் எந்த ஒரு வாய்ப்பையும் அரசும் சரி, மக்களும் சரி தவற விடக்கூடாது. அரசு அதிகாரிகள் இந்த விஷயத்தில் அதிக அக்கறை காட்ட வேண்டும். அரசும் விழிப்புணர்வை ஏற்படுத்தி அதிகாரிகளை முடுக்கி விட வேண்டும் இல்லை யென்றால் எத்தனை பருவமழை பொய்த்தாலும் நீரின்றி தண்ணீர் தேவையால் தமிழகம் கண்ணீர் விடும் சூழல் உருவாகி விடும்.

- குருதேவ்



மொட்டை வெயிலில் எண்ணெய்ப் பக்கு உதிரக் காத்துக் கிடக்கும் தெய்வத்தைப் பட்டும் படாமல் எண்ணெய்த் தேய்த்து, பேருக்கு நீரூற்றிக் குளிப்பாட்டுவார்கள். வாய்க்குள் ஏதோ மந்திரம் போன்ற ஒன்றை முணுமுணுத்து விட்டுக் கால் கட்டை விரலால் சேவலின் கழுத்தை இழுத்துப் பிடித்துப் பலிகொடுப் பார்கள்.



# அசைவ உணவால் அதிகமாகும் நோயாளிகள்

அறுந்த சேவல் ஒற்றை இறக்கையைத் தரையில் அணைத்து மற்றொரு இறக்கையைப் பலங்கொண்ட மட்டும் அடித்து மைதா னத்தையே ஒரு ரவுண்டு அடித்து அடங்கும்.

சேவலின் இறகுகளைச் சுத்தமாகப் பறித்து மஞ்சள் தடவி, சுள்ளி கூட்டி பற்ற வைத்த அடுப்பில் வாட்டி எடுப்பார்கள். சாப்பிடுகிற தலைக்கணக்குக்கு ஏற்ப துண்டங்கள் போட்டு, ஒன்றுக்கு நான்கு முறை மஞ்சளும் உப்பும் இட்டு அலசுவார்கள்.

அரைக்க அம்மி இல்லாத காட்டுக் கோயிலில் கையோடு கொண்டுவந்த மிளகு, சீரகம், இஞ்சி, பூண்டு, பட்டை, கிராம்பு, கசகசா, சின்ன வெங்காயம் அனைத்தையும் அகலமான கோயில் படிக் கல்லில் வைத்து கைக்கு வாகான கல்லைக்கொண்டு முடிந்த மட்டிலும் மையாக இடிப்பார்கள். செக்கச் செவேல் என மின்னும் பட்டை மிளகாய் ஒரு பத்துப் பன்னிரண்டை நீர் தெளித்து இடிப்பார்கள்.

துண்டமிட்ட கறியை மண் சட்டியில் போட்டு நல்லெண்ணெய்யைச் சற்றே தாராள மாகவிட்டு (சேவலின் சூட்டைத் தணித்து சமன் செய்ய நல்லெண்ணெய்) நீர் விடாமல் மூடி வைத்து இரண்டு புரட்டுப் புரட்டி எடுப்பார்கள். அதற்குப் பிறகு மிளகாய், மசாலா அயிட்டங்களைப் பாதி வெந்து மினு மினுக்கும் கறித்துண்டுகளுடன் போட்டு, அதன் மீது தக்காளிப் பழங்களைப் பிய்த்துப் போட்டு மீண்டும் கறியும் மசாலாவும் சுருங்கிப் போகும் அளவுக்குப் புரட்டி விட்டுக் கொண்டே இருப்பார்கள். கறியிலும் மசாலா விலும் உடனுறைந்த நீர் முற்றிலும் வற்றிய பிறகு, புற நீர் சேர்க்கத் தொடங்குவார்கள்.

வெப்ப மண்டலப் பகுதியைச் சேர்ந்த நாம் உண்கிற உணவு எதுவானாலும் நீர்த்த தன்மையில் உண்பதே உடல்நலனுக்கு உகந் தது. அந்த வகையில் இறைச்சி போன்ற கடினத் தன்மை வாய்ந்த உணவையும் வறள் தன்மைக்கு மாறாக, செரிக்க எளிதான குழம்பை எப்படிச் சமைப்பது என்று பார்ப்போம்.

என்னைப் பொறுத்தவரையில் நீர்த்த கோழிக் குழம்புக்கு ஆகப் பிரசித்தம், அதிலும் எளிமையானது எங்கள் குலதெய்வ நேர்த்திக் கடன் தீர்த்து வைக்கிற சேவல் குழம்புதான்.

ஊரிலிருந்து பத்து கிலோ மீட்டர் தாண்டியுள்ள கோயிலுக்கு அறுபட வேண்டிய சேவல், கத்தி, கபடா போன்றவற்றுடன் சுற்றம் சூழ உறவுகளையும் மாட்டு வண்டியில் ஏற்றிக்கொள்வோம்.

டூருக்குக் கிளம்பிய சந்தோஷத்தில் வண்டியின் அடிப்பாகத்தில் கயிற்றில் கட்டிய பண்ட பாத்திரங்களும் ஏக சத்தங்கள் எழுப்பி ஆடிக் கொண்டு வரும். பல்வேறு வண்ணங்கள் காட்டும் நெளுநெளு சேவலின் இறகைப் பிள்ளைகள் ஆசை தீரத் தடவிக் கொடுத்துக் கொண்டு வருவார்கள். விழா நாயகனும் விழப் போகிற நாயகனுமான சேவல் அதிகம்பீரமாகத் தலையைச் சிலுப்பிக்கொண்டு வரும்.

வீட்டில் சமைப்பதாக இருந்தாலும் கறிக் குழம்புக்கு வேண்டிய மிளகாய், மல்லி, இஞ்சி, பூண்டு, கைக்குக் கிடைக்கும் கறி மசாலாக்கள் சிறிதளவு, மசாலாவின் சீற்றத்தைத் தணிக்கச் சிறிதளவு தேங்காய், கசகசா ஆகியவற்றைச் சீரான அளவில் சேர்த்து அம்மியில் துவையலைப் போல அரைத்துக்கொண்டால் போதும்.

இங்கே நாம் கவனிக்க வேண்டியது. இறைச்சியின் கவிச்சி வாசம் போக்குவதற்காகவோ சுவையைக் கூட்டுவதற்காகவோ எதையும் மிதமிஞ்சிச் சேர்க்க வேண்டியதில்லை.

மிக்ஸியில் மசாலாக்களை அரைக்கிற போதும் சூடேறாத அளவுக்கு ஒன்றுக்குப் பலமுறை நிறுத்தி நிறுத்தி அரைக்க வேண்டும். கிரைண்டரில் நிதானமாக அரைப்பதும்கூடச் சூடேற்றத்தைக் குறைக்க உகந்தது.

கண்டிப்பாகத் தவிர்க்க வேண்டியது பாக்கெட் மசாலா. காரணம் அதிக வெப்பத்தில் அரைக்கப்பட்ட அது விரைவில் கெட்டு விடும் தன்மையுடன் இருக்கும். அதனால் வண்டு பிடிக்காமல் இருக்க ரசாயனம் கலந்திருப்பதோடு செயற்கை வாசமும் நிறமியும் சேர்த்திருப்பார்கள்.

செரிக்கக் கடினமான இறைச்சியுடன் இத்தகைய செயற்கை ரசாயனங்களையும் உடல் செரிக்க நேர்கிறபோது, வயிற்றில் தொடங்கி தொண்டை வரைக்கும் விமான ஓடுபாதை போல 'கர்புர்' என்ற தொடர் எரிச்சல் தவிர்க்க முடியாததாகிவிடும். இந்தத் தொல்லைகள் இறைச்சியால் வந்தது என்று நம்மில் பலரும் நினைத்துக்கொண்டு, அதன் மீது அபாண்ட பழி சுமத்துகிறோம். ஆனால், காரணகர்த்தா வேறு.

அதேபோலக் கூடிய மட்டிலும் உணவகங்களில் இறைச்சி உண்பதைத் தவிர்த்துவிட வேண்டும். அதற்கு நிறைய காரணங்கள் உண்டு. ஒரு ரகசியம் சொல்கிறேன். அதை நீங்கள் மட்டுமே வைத்துக்கொள்ள வேண்டாம், எல்லோரிடமும் சொல்லுங்கள்.

அரபு நாடுகளுக்கு அன்றாடம் தேவையான கோழி, ஆடு இறைச்சி வட ஆப்பிரிக்காவில் இருந்து செல்கிறது. அங்கு குறிப்பிட்ட நேரத்துக்குள் பயன்படுத்த முடியாமல் டன் கணக்காகக் காலாவதியான ஆடு, கோழி இறைச்சியை இந்தியாவுக்கு, குறிப்பாக மும்பை, சூரத் போன்ற மேற்குக் கடற்கரை நகரங்கள், சென்னைக்கு அனுப்பிவிடுகிறார்கள்.

அதேபோல விருதுநகர், திண்டுக்கல் போன்ற நகரங்களில் உள்ள சில உணவகங்களுக்கு, வெட்டப்பட்ட ஆடு முறையாகப் பதப்படுத்தப்படாமல் பத்துப் பன்னிரண்டு மணி நேரம் பயணத்தில் வந்து சேர்கிறது.

கோழியில் நார்த்தன்மை மிகுந்த நாட்டுக் கோழிதான் சிறப்பானது என்பதில் சந்தேகமில்லை. நாட்டுக் கோழி வளர்த்து விற்ற காசில் அரிசி பருப்பு மசாலாவும், பிராய்லர் கறியும் வாங்கித் தின்னும் நெருக்கடிக்குத் தள்ளப்பட்ட விசித்திர முரண்கள் நிரம்பியது நம் நாடு.

**இந்தச் சூழலில் கூடியமட்டிலும் ஒன்றரை கிலோவுக்கு மிகாத பிராய்லர் கோழி வாங்கி, மாதத்துக்கு இரண்டு முறை உண்பதால் உடல்நலனுக்குப் பேராபத்து எதுவும் நேர்ந்துவிடாது.**

**-ஆர்.ஜெயா**



# மோடித்துவமா? அரசுத்துவமா?

மக்களால், மக்களுக்காக, மக்களைக் கொண்டு உருவாக்கப்படும் ஒரு அமைப்பு அரசு. அரசுக்கென்று ஒரு ஆன்மா இருக்கிறது. எனினும், அது மக்களுக்கு அப்பாற்பட்ட ஒரு தனித்த உயிரினத்துடையது அல்ல. அந்த ஆன்மாவைத் தனித்த உயிரினமாக்கி, அதன் பெயரால் தங்கள் நலனைப் பாதுகாத்துக்கொண்டு, மக்களை ஒடுக்க ஆட்சியாளர்கள் முற்படும்போது அரசுத்துவம் பிறக்கிறது. தாங்களும் மனிதர்கள், எல்லா மனிதர்களுக்கும் உரிய சகல பலங்கள், பலவீனங்களைக் கொண்டவர்கள், தவறிழைக்கும் வாய்ப்புள்ளவர்கள், மக்களுக்குக் கடமைப்பட்டவர்கள், தங்களுக்குத் திசை காட்டும் அதிகாரம் மக்கள் கையில் இருக்கிறது என்பதை மறந்து, ஆட்சியாளர்களும் அதிகாரவர்க் கமும் தங்களையே அரசாகவும் நாடாகவும் கற்பித்துக் கொள்ளும் அபத்தம் அரங்கேறத் தொடங்கும்போது அரசுத்துவம் ஒரு மதம் ஆகிறது.

மக்களுக்கு அரசு தேவை. அதேசமயம், அது மக்க ளால், மக்களுக்காகச் செயல்படுவது எனும் பிரக்ஞையும் எச்சரிக்கையும் எப்போதும் தேவை. இந்த விஷயத்தில் காந்தியின் கருத்து சிறந்த வழிகாட்டி. “எது குறைவாக செயல்படுகிறதோ, அதுவே சிறந்த அரசு” என்ற தோரோவின் கருத்தைத் தொடர்ந்து வலியுறுத்தியவர் அவர். ‘‘அதிகாரத்தை மையப்படுத்தும் அமைப்புமுறை அஹிம்சையின் அடிப்படையில் அமையப்பெறும் சமூகத்துக்கே எதிரானது...

அது நம் நாட்டின் ஏழு லட்சம் கிராமங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்று நான் விரும்பு கிறேன்’’ என்றவர். காந்தியைப் பொறுத்தவரை கடவு ளுக்கு அடுத்த நிலையிலுள்ள பரம்பொருள் தனிநபர் எனும் மனிதன்தான். “எந்தச் சமூகமும் தனிநபர் சுதந் திரத்தை மறுதலித்து உருவாக்கப்பட முடியாது. அது மனிதன் என்பவனின் அடிப்படை இயல்புக்கே முரணா னது ஜனநாயகம் என்பது மக்களெல்லாம் ஆட்டு மந்தை போல் நடந்துகொள்ளும் நிலை அல்ல. அளவுக்கதிக மாக அதிகாரத் தரப்பால் திணிக்கப்படும் ஒழுக்கம் என்பது ஜனநாயகத்தைக் கொன்றுவிடும்” என்றார் காந்தி.

மாறாக, அதிகாரக் குவிப்பையும், அதிகபட்சம் செயல் படும் சாத்தியத்தையும் கொண்ட ஒரு அரசியலமைப்பை நாம் பெற்றோம். இந்த 70 ஆண்டுகளில் நம்முடைய ஆட்சியாளர்கள் மேலும் மேலும், தங்கள் அதிகாரக்

குவிப்பை வலுப்படுத்தினார்களே தவிர, நெகிழச் செய்யவில்லை. அதேசமயம், அரசை வலுப்படுத்துவதற்காகக் குடிமக்களுக்கு வழங்கப்பட்ட அடிப்படை உரிமைகளை நீர்க்கச்செய்தார்கள். நம் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கும் பகுதி மூன்று தொடர்பான 35 சட்ட விதிகளில் இதுவரை 22 முறை அரசியலமைப்பு ரீதியிலான திருத்தங்கள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப் பட்டபோது, குடிமக்களுக்கு உறுதியளிக்கப்பட்ட உரிமைகளை இந்தத் திருத்தங்களில் ஒன்றுகூட வலுப்படுத்தவில்லை.

ஆக, ஒரு மோடி மட்டும் அல்ல நம் காலத்தில் நாம் எதிர்கொள்ளும் பெரும் பிரச்சினை. இந்திய வரலாற்றில் நெடுநாட்களாக நீரூற்றி வளர்க்கப்பட்ட அரசுத்துவம் பூதாகரமாகியிருக்கிறது - பெரும்பான்மை வாதத்தின் ஆதரவும் அதற்கு இருக்கிறது. முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு இந்தி - இந்து - இந்துத்துவம் மேலோங்கிய தேசியத்தோடும் முதலீட்டோடும் அரசுத்துவம் இன்று பிணைந்திருக்கிறது. இந்த மூன்றும் இணையும் புள்ளிதான் சர்வாதிகாரம் ஊற்றெடுக்கும் புள்ளி. சர்வாதிகாரம் ஊற்றெடுக்கும் தருணங்களில் அரசுத்துவத்தின் பிடி இறுகும். தனி மனிதனின் அன்றாட வாழ்வு கிட்டத்தட்ட மடாலயங்களின் சம்பிரதாயத்துக்கு ஒப்பானதாகும். சினிமா பார்க்கச் செல்பவர்கள் திரையரங்கில் தேசிய கீதத்துக்கு எழுந்து நின்று வணக்கம் தெரிவிக்க வேண்டிய நிர்ப்பந்தச் சூழல் இதையே உணர்த்துகிறது.

சுதந்திர தினத்துக்குப் பிறகு நள்ளிரவில் நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் கூடி நிறைவேற்றிய ‘ஜிஎஸ்டி சட்டம்’ இந்தக் குடியரசின் அடிநாதமான கூட்டாட்சித் தத்துவத்தின் மீதான ஒரு கடும் தாக்குதல். மாநிலங்கள் தங்கள் நிதிச் சுதந்திரத்தைப் பறிகொடுத்த தருணம் அது. ‘இனி நாட்டின் ஒட்டுமொத்த வரிவிதிப்பு முறையும் ஜிஎஸ்டி ஆணையத்தின் அதிகாரத்துக்கு உட்பட்டது.

மத்திய அரசையும் அனைத்து மாநிலங்களையும் உறுப்பினர்களாகக் கொண்ட இந்த அமைப்பில் இனி, ஒரு மாநிலம் புதிய வரியைக் கொண்டுவர 3/4 பங்கு ஆதரவு அந்த மாநிலத்துக்கு வேண்டும்; அதேசமயம், அப்படி ஒரு மாநிலம் கொண்டு வரும் வரியைத் தோற்கடிக்க மத்திய அரசு போடும் ஒரு ஓட்டு, 3/4 பங்கு ஓட்டுகளுக்குச் சமமானது’ என்கிற ஏற்பாடு எவ்வளவு பாரபட்சமானதும் அநீதியுமானதுமாகும்? வரி விதிக்கும் அதிகாரத்தை மாநிலங்களிடமிருந்து பிடுங்கியதன் மூலம், மாநில அரசுகளின் அதிகார முதுகெலும்பு முறிக்கப்பட்டிருக்கிறது.

எத்தனை கட்சிகள், ஊடகங்கள் ஜிஎஸ்டி வரியை இங்கே இந்தக் காரணத்துக்காக எதிர்த்தன? காங்கிரஸின் எதிர்ப்பு ஜிஎஸ்டி வரி விகிதத்திலும் அது அமலாக்கப்படும் விதத்தையும் சார்ந்தது; ஜிஎஸ்டி வரிக்கான சூத்திரதாரியாக இருந்தவர்களில் முக்கியமானவர் வங்கத்தின் முன்னாள் நிதியமைச்சரும் இடதுசாரிப் பொருளாதார நிபுணர்களில் ஒருவரான அஸிம் தாஸ் குப்தா என்பதை இங்கு நினைவூட்டிக் கொள்ள வேண்டும்.

எல்லாவற்றையும் நிர்வாகம் சார்ந்த பிரச்சினைகளாக அணுகும் மனநிலைக்கு இன்று பெரும்பான்மை ஊடகங்களும் கருத்துருவாக்கர்களும் வந்துவிட்டனர். அரசியல் தலைமைகள் ஊடகங்களுக்குப் பார்வையை வழங்கிய காலம் போய், ஊடகங்களின் பார்வையை அவை தனதாக்கிக்கொள்ளும் காலத்துக்கு வந்திருக்கின்றன.

ஒரு ஆண்டுக்கும் மேலாக காஷ்மீரில் தொடரும் போராட்டம் வெறும் சட்டம், ஒழுங்குப் பிரச்சினையாகவும், நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நடைபெற்றுவரும் விவசாயிகளின் தன்னெழுச்சியான போராட்டங்கள், வெறும் விவசாயிகளின் வருமானப் பிரச்சினையாகவும் மட்டும் பெரும்பான்மை ஊடகங்களில் அணுகப்படுவது வேறு எதை உணர்த்துகிறது?

**ஜனநாயகத்தை உரக்கப் பேசுபவர்களின் குரல்கள் இங்கு மாற வேண்டும். நாடு என்பது மக்களின் தொகுப்பு; அது நிலங்களின் தொகுப்பு அல்ல - ஒருபோதும் வழிபாட்டுக்குரிய தல்ல அரசு. ஜனநாயகத்தைப் பற்றிப் பேசுபவர்களே பலர் இன்று மக்களின் பார்வையிலிருந்து நாட்டின் பிரச்சினைகளை அணுகும் கண்களை இழந்து, அரசின் பார்வையிலிருந்து மக்களை வெறுக்கிறோம் என்பதை உணர வேண்டும். இந்தப் பார்வை மாறாமல், அரசின் கண்களை ஒரு நாட்டில் மாற்றவே இயலாது!**



# கீரை சாப்பிட்டால் ஆரோக்கியமா?

**பொதுவாக, கீரை அனைவருக்கும் தேவையானதொரு உணவுப் பொருள். என்றாலும் குழந்தைகள், பெண்கள், கர்ப்பிணிகள், முதியோர்கள், ரத்தசோகை உள்ளவர்கள், நீரிழிவு உள்ளவர்கள் கட்டாயம் கீரை சாப்பிட வேண்டும்.**

*உங்களைப் போன்று அறுவை சிகிச்சை செய்துகொண்டவர்களுக்கு உடனடியாகப் புரதச்சத்துள்ள உணவும் வைட்டமின்கள், தாதுக்கள் நிறைந்த உணவும் தேவைப்படும். இதனால் மருத்துவர்கள் மல்டி வைட்டமின் மாத்திரைகள் சாப்பிட அறிவுறுத்துவார்கள். சமயங்களில் தேவையைப் பொறுத்துப் புரதச் சத்து பவுடர்களையும் பரிந்துரை செய்வார்கள்.*

*அப்படியானவர்கள் தினமும் ஒரு கீரை சாப்பிட வேண்டும். அத்துடன் பருப்பையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். பருப்பைத் தனியாகவும் சேர்த்துக்கொள்ளலாம். கீரையிலும் சேர்த்துச் சமைத்துக்கொள்ளலாம். இதன்மூலம் உங்களுக்குத் தேவையான சத்துக்கள் இயற்கை வழியிலேயே கிடைத்துவிடும்.*

*எனக்குச் சிறு வயதிலிருந்தே கீரை என்றாலே ஒத்துக்கொள்ளாது. சமீபத்தில் நான் ஒரு அறுவை சிகிச்சை செய்துகொண்டேன். அலை பேசியில் என் நலம் விசாரித்த ஒரு இளம் மருத்துவ நண்பர் 'தினமும் உணவில் கீரை சேர்த்துக்கொள்ளுங்கள், சீக்கிரம் குணமடை வீர்கள்' என்றார். கீரை சாப்பிட்டால் மலச்சிக்கல் ஏற்படாது எனக் கேள்விப்பட்டிருக்கிறேன். பொது ஆரோக்கியமும் வலுப்படும் என்பதை இப்போதுதான் கேள்விப்படுகிறேன். இது சரியா?*

*இது மிகவும் சரி. வீட்டிலேயே வளர்க்கக்கூடியதும், விலை மலிவானதும், வைட்டமின் மற்றும் தாது சத்துக்கள் மிகுந்ததுமான ஓர் உணவுப் பொருள் இருக்கிறது என்றால், அது கீரைதான். எளிய கீரையில் ஏராளமான சத்துக்கள் உள்ள விவரம் பெரும்பாலோருக்குத் தெரிவதில்லை. எனவேதான், பலரும் இதை அலட்சியப்படுத்துகின்றனர்.*

**ஆர்கானிக் கீரை நல்லது!**

*ஆர்கானிக் கீரைகள்தான் மிகவும் நல்லது. வீட்டிலேயே வளர்க்கப்படும் கீரையும் நல்லது. வெளியில் வாங்கப்படும் கீரைகள் பெரும்பாலும் அதிகமாகப் பூச்சிக்கொல்லிகளையும் ரசாயன உரங்களையும் பயன்படுத்தி வளர்க்கப்பட்டவை. அவற்றில் ஆரோக்கியத்தைப் பாதிக்கும் கெடுதல்கள் பல உண்டு. ஆகவே, அவற்றைத் தவிர்ப்பது நல்லது. வேறு வழியில்லாமல் அவற்றை வாங்கிப் பயன்படுத்துவதாக இருந்தால், தண்ணீரில் நன்கு அலசி சுத்தப்படுத்திய பிறகே சமைக்க வேண்டும்.*

*சமைக்கும்போது நன்றாக வெந்த கீரைகள், அவற்றிலுள்ள சத்துக்கள் எல்லாவற்றையும் நமக்குத் தரும். அதற்காக அதிக வெப்ப நிலையில் கீரையை அதிக நேரம் வேகவைக்கவும் கூடாது. அப்படிச்செய்தால், அதிலுள்ள வைட்டமின் சி அழிந்துவிடும். பொதுவாகவே கீரைகளில் புரதம், மாவுச்சத்து, கலோரிகள் மிகவும் குறைவு என்பதால், நீரிழிவு நோயாளிகள் பயமின்றிச் சாப்பிடலாம்.*

*தினமும் ஒவ்வொரு கீரையைச் சேர்த்துக் கொண்டால், உடலுக்குத் தேவையான எல்லா வைட்டமின்களும் தாதுக்களும் கிடைத்துவிடும். அதேநேரம், கீரைகளில் அதிக நார்ச்சத்து உள்ளதால், செரிமானமடைய நேரம் ஆகும். இதனால், இரவில் கீரை சாப்பிடுவதைத் தவிர்க்க*

வேண்டும். கீரை சாப்பிட்டதும் நிறையத் தண்ணீர் குடிக்க வேண்டும். சில கீரைகள் சிறுநீரகப் பிரச்சினை அல்லது கௌவுட் (Gout) போன்ற மூட்டுவாதப் பிரச்சினை உள்ளவர்களுக்கு ஆகாது. அவர்கள் மருத்துவர் ஆலோசனைப்படி கீரைகளைத் தேர்வு செய்து கொள்ள வேண்டும்.

**சில முக்கியமான கீரைகளில் என்ன சத்து உள்ளது:**

**பசலைக் கீரை**

இது 'கீரைகளின் அரசன்' என அழைக்கப் படுகிறது. காரணம், குறைந்த அளவில் இருந் தாலும் பல சத்துகளைக் கொண்ட கீரை இது. வைட்டமின் ஏ, சி, பி காம்ப்ளெக்ஸ், கால்சியம், பாஸ்பரஸ், சோடியம், அமினோஅமிலம் எனப் பல சத்துகள் நிறைந்த கீரை. இதைத் தொடர்ந்து சாப்பிடுபவர்களுக்கு வாய்ப் புண் வராது. இரைப்பைப் புண் வராது. இது உடலுக்கு வலிமை தருகிறது. நோய்த் தொற்றைத் தடுக் கிறது. புற்றுநோயைத் தடுக்கும் குணமும் இதற்கு உண்டு. இதை அடிக்கடி சாப்பிடுபவர்களைச் சிறுநீரகப் பிரச்சினைகள் அண்டுவதற்கு அஞ்சும். பாலூட்டும் பெண்களுக்கு அற்புத உணவு இது.

**வெந்தயக் கீரை**

இதில் வைட்டமின் 'பி காம்ப்ளெக்ஸ்' மிக அதிகமாக இருக்கிறது. இரும்புச் சத்தும் நார்ச் சத்தும் ஓரளவு இருக்கின்றன. கால்சியம், பீட்டா கரோட்டின் நிறைய இருக்கின்றன. தாமிரம், துத்தநாகம், மக்னீசியம், மாங்கனீஸ் ஆகியவை தேவைக்கு உள்ளன. பொட்டா சியம் குறைந்த அளவில் உள்ளது. இது பசியைத் தூண்டி செரிமானத்தை அதிகரிக்கிறது. இரைப்பையில் புண் உள்ளவர்களுக்கும் பார்வைக் கோளாறுகள் உள்ளவர் களுக்கும் இது சிறந்ததொரு உணவு. இது மூளை நரம்புகளுக்கு நல்லது. சிறுநீரக நோயாளிகளுக்கு ஏற்ற கீரை.

**மணத்தக்காளிக் கீரை**


இதில் வைட்டமின் 'பி காம்ப் ளெக்ஸ்' அதிகமாக இருப்பதால் பொது உடல் ஆரோக்கியத் துக்கு நல்லது. இதைத் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால், வாய்ப் புண்ணும் இரைப்பைப் புண்ணும் குணமாகும். இதில் ஓரளவுக்கு புரதச்சத்து, நார்ச்சத்து, இரும்புச் சத்து, கால்சியம் ஆகியவை உள்ளன. ரத்தசோகை உள்ளவர்களுக்கு இது நல்லதொரு கீரை. வாரம் ஒருமுறையாவது குழந்தைகள் இதைச் சாப்பிட பழக்கப்படுத்தி-விட வேண்டும்.

**முருங்கைக் கீரை**

இதில் இரும்புச் சத்து, கால்சியம், நார்ச்சத்து, வைட்டமின் சி, பீட்டா கரோட்டின் ஆகியவை அதிகமாக உள்ளன. பொட்டாசியம், மெக்னீசியம், குரோமியம், தாமிரம், துத்தநாகம் போன்ற சத்துக்களும் இதில் தேவைக்கு உள்ளன. இது கண்களுக்கு மிக நல்லது. குறிப்பாக மாலைக்கண் நோயாளிகள் தினமும் இதைச் சாப்பிட்டுவர, நோய் குணமாகும். இது ரத்தசோகையைப் போக்க உதவுகிறது. எலும்பு வளர்ச்சிக்குத் துணை செய்கிறது. நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கிறது. இரைப்பைப் புண்ணைக் கட்டுப்படுத்துகிறது. இதிலுள்ள நார்ச்சத்து மலச்சிக்கலைப் போக்குகிறது. இதய நோயாளிகள் தாராளமாக இதைச் சாப்பிடலாம்.

**அரைக் கீரை**

இதில் கால்சியமும் 'வைட்டமின் சி'யும்



ஆரோக்கியம் என்பதற்கு நோயற்ற நிலை, உடல் நலம் என்ற பொருள் உண்டு. நல்ல உடல் ஆரோக்கியத்துடன் இருப்பதையே இப்படி குறிப்பிடுகிறார்கள். இத்தகைய நிலைக்கு நாம் உண்ணும் உணவில் தொடங்கி சில வழிமுறைகளையும் பின்பற்ற வேண்டியது அவசியமாகிறது.



அதிகம். பீட்டா கரோடின், நார்ச் சத்து ஓரளவுக்கு உள்ளது. இரும்புச் சத்து மிக அதிகம். ரத்தசோகை உள்ளவர்களுக்கும் கர்ப்பிணிகளுக்கும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் மிகவும் ஏற்ற உணவு இது. புரதம், கலோரிகள் குறைவாக இருப்பதால், உடற்பருமன், இதய நோயாளிகள், நீரிழிவு நோயாளிகள் ஆகியோர் இதைத் தாராளமாகச் சாப்பிடலாம். இது உணவுச் செரிமானத்துக்கு மிகவும் உதவுகிறது.

**அகத்திக் கீரை**

கால்சியம் மிகுதியாக உள்ள கீரை இது. எலும்புகளின் வளர்ச்சிக்கு உதவுவதால், வளரும் பருவத்தில் உள்ளவர்களுக்கு நல்லதொரு உணவு. கீரைகளில் அதிக ஆற்றல் தருவதும் இதுதான். பல மருத்துவக் குணங்கள் இந்தக் கீரைக்கு உண்டு. புரதமும் கார்போஹைட்ரேட்டும் ஓரளவுக்கு உள்ளன. இதில் பாஸ்பரஸ் அதிகம் என்பதால், பல் நலன் காக்க உதவுகிறது. வைட்டமின் ஏ சத்தும் இரும்புச் சத்தும் தேவைக்கு உள்ளன. கண்ணுக்கு நல்லது. இதைத் தொடர்ந்து சாப்பிடுபவர்களுக்கு மாலைக்கண் நோய் குணமாகும். ரத்தசோகை நோயாளிகளுக்கு இது உதவும்.

**புதினா கீரை**

செரிமானத்துக்கு ஏற்ற கீரை இது. எல்லா வயதினருக்கும் ஏற்றதும் இதுதான். சாப்பிட அடம்பிடிக்கும் குழந்தைக்கும் பசியைத் தூண்டி, சாப்பிடவைக்கும். வைட்டமின் ஏ, சி, ரிபோஃபிளேவின், ஃபோலிக் அமிலம் ஆகிய சத்துக்கள் நிரம்பியுள்ளன. இரும்புச் சத்தும் நார்ச்சத்தும் தேவைக்கு உள்ளன. மக்னீசியம், மாங்கனீஸ், தாமிரம், துத்தநாகம், குரோமியம் எனப் பல தாதுக்கள் இதில் அடங்கியுள்ளன. ரத்தசோகையைப் போக்கவும் மலச்சிக்கல்லைத் தீர்க்கவும் இது உதவுகிறது. புதினாவில் 'மென்தால்' எனும் வேதிப்பொருள் உள்ளது, இது சளியும் தடுமமும் பிடிக்காமல் பார்த்துக்கொள்கிறது. மலச்சிக்கலைப் போக்குகிறது.

**- சந்தோஷ்சிவன்**


வாழ்க தமிழ்! வளர்க தமிழகம்!!

# மக்கள் விசாரணை

Applied in **NEWS PAPER ASSOCIATION OF INDIA**

**லஞ்ச ஊழல் விழிப்புணர்வு**

ஆண்டு-6 செப்டம்பர்-2017 இதழ்-4

ஸ்ரீ திருமலை பப்ளிகேஷன் (பி) லிட்., சார்பாக வெளியிடுபவர் ஆசிரியர்

**A. மவுரியன்,** B.A.,Dip. Journilisam,

• ஆசிரியர் குழு

**A. காதர் மொய்தீன், ஆ.தே. முருகையன், V. அருணாச்சலம், காசி. அரங்கநாதன், மு. பரமசிவம்**

• நிர்வாக ஆசிரியர்

**வீ. வடிவேல்,** B.B.A.,

• உதவி ஆசிரியர்

காக்களூர் **பாபு தங்கவேல்**

• துணை ஆசிரியர்கள்

**ஆர்.ஆர். சண்முகவேல், கே. ரமேஷ்குமார், S. கோபி, M. தரணி. எஸ். சரவணன், பி. மாரிமுத்து, D. ரவி, வீரஆறுமுகம், A. பாலச்சந்தர், ந. நித்யா, கே.பாலாஜி, அ.மு.ரமணாத்திரி**

• முதன்மை செய்தியாளர்கள்

**சமயசெல்வம்,** மதுரை. **சத்தியராஜ்,** நாமக்கல். **பாலகிருஷ்ணன், செந்தில்குமார்,** கோவை, **R. ஜெயா, K. ஷமீம் ஷகிலா, P. சாந்தா,** தென்சென்னை **யு. அக்ரம்கான், சுக்கூர்கான்,** கிருஷ்ணகிரி. **பா. சுப்பிரமணியன்,** திருநெல்வேலி. **நாகராஜ்,** மூணாறு. **மாரிமுத்து,** உளுந்தூர்பேட்டை, **சுசீ ஈஸ்வர்,** தென்காசி. **ராமசுப்பிரமணியன்,** ராஜபாளையம். **சிலம்பரசன்,** தர்மபுரி, **அ. சிவராமன்,** காஞ்சிபுரம்.

• நிருபர்கள்

**எம். நிவேதிதா, இர்வின், கனகதுர்கா, ராஜேஷ் அகிலாண்டேஸ்வரி, குருதேவ், சச்சின்**

• சட்ட ஆலோசகர்கள்

**M. குணசீலன்,** B.Com.,M.L.,

**M. சுதாகர்,** B.Sc.,B.L.,

(உயர்நீதிமன்றம், சென்னை.)

• புகைப்பட நிருபர்கள் :

**M. சந்தோஷ்சிவன், K. மணிவண்ணன்**

• இதழ் வடிவமைப்பு : **AKS Creative's**



அலுவலகம் :

**மக்கள் விசாரணை**

நெ.21/12, 2-வது சந்து, நடராஜ் பில்டிங் முதல் மாடி, ஜார்ஜ் டவுன், சென்னை - 600 001.

Email : news@makkalvisaranai.com / www. makkalvisaranai.com

Information Contact : feedback@makkalvisaranai.com

**Phone : 044 - 4354 2611, 93821 33334**



**Press & Registration of Book Act-in** ன்படி செய்திகள் தேர்வுக்கு ஆசிரியர் மட்டுமே பொறுப்பாவார். எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது.

# தமிழ் பத்திரிகை எழுத்தாளர்கள் சங்கம்

## 10-8-2017 அன்று நடைபெற்ற மாநில பொதுக்குழுவின் நிகழ்வுகள்





10-08-2017 அன்று நடைபெற்ற தமிழ் பத்திரிகை எழுத்தாளர்கள் சங்கத்தின் மாநில பொதுக் குழு கூட்டத்தில் மாநில தலைவர் திரு. காசி அரங்கநாதன் தலைமை வகிக்க, மாநில பொதுச் செயலாளர் திரு. ஆ. மவுரியன் முன்னிலையில் நடைபெற்றது. அதுசமயம் சங்க உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை மற்றும் விபத்து, மற்றும் மருத்துவக் காப்பீடு வழங்கப்பட்டது. கூட்டத்தில் மாநில அவைத்தலைவர் எஸ். சரவணன், மாநில துணை தலைவர் வீ. அருணாசலம், மாநில துணைத் தலைவர் கே. பாலாஜி கலந்துகொண்டனர்.

சென்னையில் தொடர்ந்து நகை பறிப்பில் ஈடுபட்டு வரும் கும்பல், டெல்லியில் ஒரு கம்பெனி போலவே செயல்பட்டு வருவது தெரியவந்துள்ளது. தமிழகம் மட்டுமல்லாமல், கேரளா, கர்நாடகா என தென் மாநிலங்கள் முழுவதும் கைவரிசை காட்டிவரும் இந்த கும்பலின் மற்ற நபர்களைப் பிடிக்க தனிப்படை போலீஸார் டெல்லியில் முகாமிட்டு தீவிர தேடுதல் வேட்டை நடத்திவருகின்றனர்.

*விமானம் மூலம் சென்னை வந்து தொடர்ச்சியாக 23 பெண்களிடம் செயின் பறித்த டெல்லி கொள்ளையர்கள் 2 பேரை கைது செய்துள்ளோம்.*

# சென்னையை கலக்கும் நூதன செயின் திருடர்கள்.!



*இதுபற்றி தனிப்படை போலீஸார் நடத்திய தீவிர விசாரணையில் பல பரபரப்பு தகவல்கள் கிடைத்துள்ளன.*

தமிழகம், கேரளா, கர்நாடகா உள்ளிட்ட தென் மாநிலங்களுக்குச் சென்று செயின் பறிப்பதற்கென்றே டெல்லியில் ஒரு பெரிய குழு செயல்படுகிறது. இதற்கு 'பாஸ்' (தலைவர்) ஒருவரும் உள்ளார். அவரது தலைமையில் 6 கிளை கும்பல், ஒவ்வொரு கிளையிலும் தலா 6 உறுப்பினர்கள் உள்ளனர்.

செயின் பறிக்கும் இடத்தை எப்படி தேர்வு செய்வது? எப்படி பறிப்பது? மாட்டா மல் தப்பிப்பது எப்படி? போலீஸிடம் மாட்டிக் கொண்டால் உண்மையைச் சொல்லாமல் இருப் பது எப்படி? என பல வகையிலும் இவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. தற்காப்புக் கலைகளும் சொல்லித் தரப்பட்டுள்ளது. இதன் பிறகு, தமிழகம், கர்நாடகா, கேரளா உள்ளிட்ட தென் மாநிலங்களுக்கு தனித்தனி குழுவாகப் பிரித்து அனுப்பப்பட்டுள்ளனர். செயின் பறிப்பது மட்டும்தான் அவர்களது வேலை. கணிசமான நகைகள் சேர்ந்ததும் கும்பலின் தலைவனிடம்

இவர்கள் தொடர்ந்து குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருபவர்கள். டெல்லியில் இவர்கள் மீது 30-க்கும் மேற்பட்ட குற்ற வழக்குகள் உள்ளன. இவர்களிடம் இருந்து 25 பவுன் நகை, செயின் பறிப்புக்குப் பயன்படுத்திய பைக் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இவர்களது கூட்டாளிகள் 3 பேர் தலைமறைவாக உள்ளனர். அவர்களைக் கைது செய்ய தனிப்படை போலீஸார் டெல்லியில் முகாமிட்டுள்ளனர். குற்றவாளிகள் விரைவில் பிடிபடுவார்கள்.

சென்னை கிழக்கு மண்டலத்தில் வழிப்பறி உள்ளிட்ட குற்ற சம்பவங்களை தடுக்கவும், குற்றவாளிகளைப் பிடிக்கவும் 3,000 கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

சென்னையில் வழிப்பறியில் ஈடுபட்ட டெல்லி கும்பலில் பல நபர்கள் இருக்கலாம் என்று போலீஸ் தரப்பில் கூறப்படுகிறது.

ஒப்படைத்துவிட வேண்டும். பறித்த நகைகள் முழுவதையும் கொடுத்துவிடுகின்றனரா, தங்களிடம் சிலவற்றை வைத்துக் கொள்கின்றனரா என்பதைக் கண்காணிக்க ஒவ்வொரு குழுவிலும் ஓர் உளவாளி உண்டு. அது யார் என்று குழுவினருக்கே தெரியாது.

சம்பந்தப்பட்ட மாநிலத்துக்குச் சென்று வர விமான டிக்கெட், செயின் பறித்தாலும், பறிக்காவிட்டாலும் மாதச் சம்பளம், பறிக்கும் நகைகளுக்கேற்ப போனஸ், சிக்கு பவர்களுக்குத் தேவையான சட்ட உதவி என ஒரு கம்பெனி போல இந்த கும்பல் செயல்பட்டு வந்துள்ளது. பார்ப்பவர் களுக்கு கொஞ்சமும் சந்தேகம் வராத அளவுக்கு செயின் பறிப்பு கொள்ளை யர்களின் கெட்டப்பையே கும்பல் தலைவன் மாற்றி விடுவாராம். விலை உயர்ந்த டி-ஷர்ட், ஜீன்ஸ், கூலிங்கிளாஸ், கேன்வாஸ் உள்ளிட்டவற்றை அவரே வாங்கிக் கொடுத்துள்ளார். ஆனால், செயின் பறிப்பில் ஈடுபட்டு 2 முறை மாட்டிக் கொண்டால் உடனடியாக நீக்கப்படுவார்கள். கும்பல் பற்றிய உண்மைகளை வெளியே சொல்லிவிடுவார்கள் என்று சந்தேகம் எழும் சூழலில், கொலை செய்துவிடுவதும் உண்டு என்று கூறப்படுகிறது.

தற்போது போலீஸில் பிடிபட்டுள்ள 2 பேரும் 2-வது குழுவைச் சேர்ந்தவர்கள். இவர்கள் கடந்த ஜூன் 19-ம் தேதி சென்னை வந்து, தொடர்ந்து செயின் பறிப்பில் ஈடுபட்டுள்ளனர். டெல்லியில் இருந்து 3-வது குழுவினர் வந்தவுடன், கொள்ளையடித்த நகைகளை அவர்களிடம் கொடுத்துவிட்டு, அடுத்தகட்ட செயின் பறிப்புக்காக காத்திருந்தபோது பிடிபட்டுள்ளனர்.

சென்னையில் செயின் பறிப்பு சம்பவங்கள் தொடர்ந்து நடந்ததை அடுத்து, தனிப்படை போலீஸார் முடுக்கி விடப்பட்டனர். ஆள் நடமாட்டம் இல்லாத ஒதுக்குப்புறம், சிசிடிவி கேமரா இல்லாத இடம் போன்ற இடங்களில் நகை பறிப்புகள் நடந்தது கண்டறியப்பட்டது. தொடர் விசாரணையில், நகை பறிப்பில் ஈடுபடுவது வட மாநிலத்தவர் என்பது உறுதி செய்யப்பட்டது.

இந்த நிலையில், திருமங்கலம் காவல் நிலைய சரகத்தின் சுற்றுப் பகுதியில் அதிகம் செயின் பறிப்பு சம்பவங்கள் நடக்கிறது. பொன்மணி என்ற திருமங்கலத்தைச் சேர்ந்த பெண்ணிற்கு 13 சரவன் நகை பட்டப்பகலில் போலீஸ் என்ற போர்வையில் களவாடிச் சென்றுள்ளனர். அதன் தொடர்பாக புகார் கொடுத்தும், இன்று வரை 2 மாதங்கள் ஆகியும் சரிவர பதில் தர காவல் துறையினர் மறுக்கிறார்கள். காவல் நிலையத்திற்கு நடையாய் நடந்துக் கொண்டிருக்கிறார்கள். தவிர நகைகள் திரும்பக் கிடைக்கவில்லை. சட்டம் ஒழுங்கு ஆய்வாளர் மற்றும் ஏ.சி. போன்ற அதிகாரிகள் இதுபோன்ற சம்பவங்களை கண்டு கொள்ளாமல் சர்வ சாதாரணமாக எடுத்துக் கொள்கிறார்கள் என்பதுதான் வருத்தமான செய்தியாக இருக்கிறது. இதைத் தவிர

சென்னையில் பல்வேறு இடங்களில் கை வரிசை காட்டினாலும், எந்த இடம் என்பதெல்லாம் அவர்களுக்குத் தெரியவில்லை. கண்போன போக்கில் சென்று, கண்ணில் பட்ட பெண்களிடம் நகையைப் பறிப்பதை வழக்கமாக வைத்திருந்துள்ளனர். பிறகு சாவகாசமாக ஹோட்டலுக்கு சென்று சாப்பிடுவார்கள். யாரிடமாவது, முக்கியமாக வடமாநில செக்யூரிட்டிகளிடம் இடம் விசாரித்து, சென்ட்ரல் ரயில் நிலையம் செல்வார்கள். அங்கிருந்து டெல்லிக்கு ரயில் ஏறி-விடுவார்கள். இதுபோல 4 முறை சென்னையில் இருந்து டெல்லிக்கு சென்றிருக்கின்றனர் என்பது விசாரணையில் தெரியவந்துள்ளது.

சென்னையில் எங்கெங்கு திருடினோம் என்பது அவர்களுக்குத் தெரியாததால், அவர்களது செல்போன்களைப் பறித்து டவர் லொக்கேஷன் அடிப்படையில் விசாரித்து, சம்பவ இடங்களை சைபர் கிரைம் போலீஸார் அடையாளம் கண்டுபிடித்துள்ளனர்.

தென் மாநிலங்களில் நகைப் பறிப்பில் ஈடுபடும் இந்த கும்பலைச் சேர்ந்தவர்கள் டெல்லியில் நல்ல வசதி வாய்ப்புடன் வாழ்ந்து வருகின்றனர். ஒருவன் டெல்லி மங்கள்பூரில் 5 மாடி கட்டிடம் கட்டியிருக்கிறான். மற்ற பலரும் சொந்த வீட்டில் வசிக்கின்றனர்.

கொள்ளையர்கள் செயின் பறிப்பு முடிந்ததும் குடும்பத்தினரை தொடர்பு கொள்வார்கள். 24 மணிநேரம் வரை அவர்களிடம் இருந்து எந்த அழைப்பும் வராவிட்டால் மாட்டிக் கொண்டார்கள் என்பதை அறிந்து, குடும்பத்தினர் அந்த வீட்டில் இருந்து தப்பிவிடுவார்கள். இந்த முறையும் அப்படிதான் நடந்துள்ளது. சென்னை போலீஸார் டெல்லி சென்று பார்த்தபோது குற்றவாளிகளின் வீட்டிலும் யாருமே இல்லையாம்.

**– இர்வீன்**

# அழி உழவு மாடும்?

கால்நடை சார்ந்த பொருளாதாரம் என்பது வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் இருந்தே தொடர்ந்து வருகிறது. கால்நடைகளை வளர்ப்பது அதன் மூலம் வருவாய் ஈட்டுவது என்ற பொருளாதார நடவடிக்கை நம் முன்னோர்கள் தொடங்கி இன்று வரை நீடித்து வருகிறது. ஆனால் நிலைமை தற்போது தலைகீழாக மாறி வருகிறது. நாளுக்கு நாள் கால் நடைகளின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. குறிப்பாக 2012-ம் ஆண்டு தகவல்படி இந்தியாவில் மொத்தம் உள்ள மாடுகளின் எண்ணிக்கை 19 கோடி. இதில் காளை மாடுகளின் எண்ணிக்கை 6.79 கோடி.

மாறாக பசுக்களின் எண்ணிக்கை 12.30 கோடி உள்ளது. 2007ம் ஆண்டு ஒப்பிடுகையில் 2012-ம் ஆண்டில் மாடுகளின் எண்ணிக்கை 4.1 சதவீதம் குறைந்துள்ளது. மாடுகள் எண்ணிக்கை குறைவதற்கு பல்வேறு காரணங்கள் இருந்தாலும் தற்போது பிரதமர் மோடி எடுத்து வரும் நடவடிக்கைகள் கால்நடைகளை அழிவின் விளிம்புக்கு அழைத்துச் செல்லப் போகிறது.

மத்தியில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சிக்கு வந்ததிலிருந்து இன்று வரை மாட்டிறைச்சி சார்ந்த பிரச்சினைகள் தொடர்ந்து கொண்டே வருகிறது. 2015-ம் ஆண்டு செப்டம்பர் 28ம் தேதி நடைபெற்ற தாத்ரி சம்பவம்தான் மாட்டிறைச்சி பிரச்சினையின் தொடக்கம். இந்த நிகழ்வுக்குப் பிறகு மாட்டிறைச்சி ஏற்றுமதி குறைந்தது. இதை உலக சுகாதார நிறுவனமும் சுட்டிக்காட்டியது. அந்த சமயத்தில் மூடி'ஸ் எனும் பொருளாதார மதிப்பீட்டு நிறுவனம் இந்தியா குறித்த தனது அறிக்கையில் 'எத்தினிக் டென்ஷன்' என்ற வார்த்தையை பயன்படுத்தியது. அதாவது இனப் பதற்றம் நீடித்தால் இந்தியாவின் பொருளாதாரம் பாதிக்கப்படும் என்று எச்சரித்தது. ஆனால் அப்போது மத்திய அரசு எதையும் காது கொடுத்து கேட்கவில்லை.

அதன் பிறகு கடந்த மே 26-ம் தேதி இறைச்சிக்காக மாடுகளை விற்பதற்கு தடை என்று மத்திய அரசு உத்தரவிட்டது. இதன் மூலம் ஏற்படப் போகும் பொருளாதார இழப்புகளை மத்திய அரசு கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் இந்த முடிவை அறிவித்தது.

அதிலும் குறிப்பாக கிராமப்புற பொருளாதாரமும் அதைச் சார்ந்த தொழில்களும் வெகுவாக பாதிக்கப்படும் என்பதை மத்திய அரசு கருத்தில் கொள்ளவில்லை. இந்த பாதிப்பால் ஏற்படும் விளைவு குறித்து ஆராய்ந்து பார்க்கையில் பல அதிர்ச்சியான தகவல்கள் கிடைத்தன. குறிப்பாக தோல் துறை, இறைச்சி ஏற்றுமதி, பால் உற்பத்தி என மூன்று முக்கியத் துறைகள் இந்த உத்தரவால் பாதிக்கப்படப் போகிறது.

கிராமங்களிலிருந்து இரண்டாம் நிலை நகரத்துக்கு வருபவர்களுக்கு அதிக வேலை வாய்ப்பை வழங்குவது தோல் துறை. கிட்டத்தட்ட 25 லட்சம் பேர் இந்தத் துறையில் பணிபுரிந்து வருகின்றனர். இறைச்சிக்காக மாடுகளை விற்பதற்கு ஏற்கெனவே விதித்த தடையால் பல்வேறு இறைச்சி கூடங்கள் மூடப்பட்டுள்ளன. குறிப்பாக உத்தர பிரதேச மாநிலம் கான்பூரில் பல இறைச்சி கூடங்கள் மூடப்பட்டுள்ளன. இந்த இறைச்சி கூடங்களை முழுவதும் நம்பியிருந்த தோல் தொழிற்சாலைகள் முடங்கியது. கிட்டத்தட்ட 4,00,000 ஊழியர்களுக்கு வேலை பறிபோகியுள்ளது. இவர்கள் அனைவருமே தினக் கூலிகள். அதுமட்டுமல்லாமல் தோல் தொழிற்சாலைகள் செயல்படாததால் ஏற்றுமதி பாதிக்கப்பட்டுள்ளது.

மாட்டிறைச்சி உற்பத்தியில் இந்தியா சர்வதேச அளவில் 4-வது இடத்தில் உள்ளது. வியட்நாம், மலேசியா, சவூதி அரேபியா, எகிப்து போன்ற நாடுகளுக்கு அதிக அளவில் மாட்டிறைச்சி ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஆனால் தாத்ரி சம்பவத்தை தொடர்ந்து 2015-ம் ஆண்டில் மாட்டிறைச்சி ஏற்றுமதியில் கடும்

சரிவு ஏற்பட்டது. இதை உலக சுகாதார அமைப்பும் சுட்டி காட்டியது. மேலும் கடந்த நிதியாண்டில் (2015-16) 332 கோடி டாலர் அளவுக்கே மாட்டிறைச்சி ஏற்றுமதி நடந்துள்ளது. இதற்கு முந்தைய நிதியாண்டில் 415 கோடி டாலருக்கு ஏற்றுமதி நடந்தது குறிப்பிடத்தக்கது. குறிப்பாக உத்தரபிரதேச மாநிலத்தில் மாட்டிறைச்சி தொடர்பான பிரச்சினைகளால் 60 கோடி டாலர் ஏற்றுமதி பாதிக்கப்பட்டிருக்கிறது.

அதேபோல 2011-ம் ஆண்டில் 20 லட்சம் டன்னாக இருந்த மாட்டிறைச்சி நுகர்வு 2016-ம் ஆண்டில் 25 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. இதன் மூலம் உள்நாட்டு மாட்டிறைச்சி வர்த்தகம் சிறப்பான முறையில் நடந்துவந்தது. ஆனால் தற்போதைய உத்தரவால் மாட்டிறைச்சியை விற்பதற்கே பதற்றமான நிலை ஏற்பட்டுள்ளது. பல இடங்களில் மாட்டிறைச்சி வைத்திருப்பதற்காக தாக்கப்படும் சம்பவங்களும் அரங்கேறி வருகின்றன.



அதாவது இறைச்சிக்காக விற்பனை செய்ய முடியாத போது பசுவை பராமரிக்க வேண்டிய நிலை இவர்களுக்கு ஏற்படும். அந்த பசுவுக்கு வாழ்நாள் முழுவதும் தீவனம் வாங்கி போட வேண்டும். அதை பாதுகாக்க வேண்டும். அந்த பசுவின் மூலம் ஈட்டிய வருமானத்தை பசுவுக்கே செலவிட வேண்டிய நிலைமை ஏற்படும்.


இறைச்சிக்காக மாடுகளை விற்கத்தடை உத்தரவுக்கு தற்போது உச்ச நீதிமன்றம் தடை விதித்திருக்கிறது. ஆனால் நிலைமை பல இடங்களில் சீரடையவில்லை. மத்திய அரசும் இறைச்சிக்காக மாடுகளை விற்பது சார்ந்த கொள்கைகளில் மாற்றங்கள் கொண்டுவருவதாக உச்ச நீதிமன்றத்திடம் கூறியிருக்கிறது. எப்படியோ ஒரு வகையில் இதை அமல்படுத்த வேண்டும் என்று பிரதமர் மோடி முனைப்பு காட்டி வருவது அப்பட்டமாக தெரிகிறது.

மாடு அதன் சார்ந்த பொருளாதார நடவடிக்கைகள் என்பது தொடர் சங்கிலி போன்றது. மாட்டை வளர்ப்பவர் தொடங்கி மாட்டிறைச்சியை ஏற்றுமதி செய்பவர் வரை அந்த சங்கிலி நீண்டுள்ளது. இதில் ஏதேனும் ஒரு இடத்தில் விடுபட்டாலும் கூட மொத்த பொருளாதார நடவடிக்கையும் அழிந்துவிடும். அதிலும் குறிப்பாக சாமானியர்கள் வாழ்வாதாரம் மிக அதிகமாக பாதிக்கப்படும்.

**பிரதமர் மோடி இந்திய பொருளாதாரத்தை வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்கிறேன் என்று தொடர்ந்து பேசி வருகிறார். சாமானியர்களின் வாழ்வாதாரத்தை அழித்து விட்டு யாருக்கான வளர்ச்சியை மத்திய அரசு கொண்டுவரப்போகிறது.**

**- கனகதுர்கா**

# ஆச்சரியப்படுத்தும் உண்மைகள் கேலக்ஸியின் பெயர் சரஸ்வதி!




இனி 'சரஸ்வதி' என்பது கடவுளின் பெயரோ, அல்லது அழிந்து போன ஒரு நதியின் பெயரோ மட்டுமல்ல, ஒரு பிரமாண்ட கேலக்ஸி பெரும்கொத்தின் (Super cluster) பெயராகவும் விளங்கப்போகிறது.

படங்களில் பார்ப்பதற்கு ஏதோ ஒரு பெரும் நகரத்தின் இரவு விளக்குகள் போல காட்சி அளிக்கும் இந்த நட்சத்திரக் கூட்டத்தைக் கண்டுபிடித்து, பெயரும் சூட்டியது நமது இந்திய வானவியலாளர்கள்! சுமார் நான்கு பில்லியன் ஒளியாண்டுகள் தொலைவில், 650 மில்லியன் ஒளியாண்டுகள் அளவில் இந்த 'சரஸ்வதி' ரம்மியமாக வீற்றிருக்கிறாள் என்று ஆச்சரியப்படுத்துகின்றனர்.

இப்பிரபஞ்சத்தில், நம் சூரியனைப் போன்று நட்சத்திரங்கள் பல தமக்குள் ஏற்படும் ஈர்ப்பு விசையால் ஒன்றோடு ஒன்று இணைந்து பிரமாண்ட கேலக்ஸியாக உருவாகிறது. இப்படி உருவான பல கேலக்ஸிகள் ஒன்றாக இணைந்து சூப்பர் க்ளஸ்டர் என்றழைக்கப்படும் கேலக்ஸி பெருங் கொத்தாக உருவாகிறது.

நம் சூரியக் குடும்பம் பால்வெளி மண்டலம் என்னும் கேலக்ஸியின் ஓர் அங்கமாகவும், அந்த பால்வெளி மண்டலம் ஐம்பதுக்கும் மேற்பட்ட கேலக்ஸிகளுடன் இலணியாக்கியா (Laniakea) என்னும் கேலக்ஸி பெரும்கொத்தாகத் திகழ்கிறது.

இதைப்போல இந்தப் புதிய சரஸ்வதி கேலக்ஸி பெரும்கொத்தும் சுமார் 42 கேலக்ஸி கொத்துகள் சேர்ந்து ஒரு பெரிய கேலக்ஸி பெரும்கொத் தாக இருப்பதாகக் கூறுகிறார்கள் நம் ஆராய்ச்சி யாளர்கள். இந்த ஆராய்ச்சிக் குழுவில் இருக்கும் ஷிஷிர் சங்க்யாயன், புனேவில் உள்ள இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் (IISER) பி.ஹெச்.டி மாணவர். இந்தக் கண்டுபிடிப்பு குறித்து அவர் பேசுகையில்,

"பிரபஞ்சத்தில் இந்த சரஸ்வதியை போல் பெரிய அளவில் இருக்கும் கேலக்ஸி பெரும் கொத்துகள் வெறும் நான்கு அல்லது ஐந்துதான். அதனாலேயே இந்தியா கண்டுபிடித்திருக்கும் இது வரலாற்றில் முக்கியமான இடத்தைப் பிடித்திருக்கிறது.

மேலும், இப்பிரபஞ்சத்தில் இருள் ஆற்றல் (Dark Energy) என்பது சமீபக் காலமாகத்தான் ஆதிக்கம் செய்யத்



தொடங்கியுள்ளது. இதைப் பற்றி யாருக்கும் அதிகம் தெரியாது.

இப்போது சரஸ்வதி குறித்து நமக்குக்கிடைத் திருக்கும் அனைத்து தகவல்களும் இறந்த காலத்தைச் சேர்ந்தவை. அதாவது இந்த இருள் ஆற்றல் ஆதிக்கம் செலுத்துவதற்கு முன் இருந்தநிலை.

எனவே சரஸ்வதியை ஆராய்வதன் மூலம், இருள் ஆற்றல், பிக் பாங் மற்றும் பிரபஞ்சம் குறித்த இரகிசயங்கள் பலவற்றை நம்மால் அறிந்துக் கொள்ள முடியும்" என்று நம்பிக்கை தெரிவித்தார்.

**'சரஸ்வதி' சில குறிப்புகள்**

இந்த சரஸ்வதி கேலக்ஸி பெரும்கொத்தின் எடை நம் சூரியனை விட 20 ஆயிரம் டிரில் லியன் மடங்கு அதிகம்.

இது நம் பூமியில் இருந்து 4 பில்லியன் ஒளி ஆண்டுகள் தொலைவில் அமைந்து இருக்கிறது. இது சுமார் 10 பில்லியன் ஆண்டுகளுக்கு முன் உருவாகியிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

இதனுள்ளே 42 கேலக்ஸி கொத்துகள் உட்பட 10,000 கேலக்ஸிகள் இடம் பெற்றிருக் கின்றன.

இந்த 'சரஸ்வதி' போன்ற கேலக்ஸி பெரும்கொத்துகள் 1980களுக்கு பிறகே ஒவ் வொன்றாகக் கண்டுபிடிக்கப்பட்டு வருகிறது..

குறைந்தபட்சம் 10 மில்லியன் பெரும் கொத்துகள் அறியக்கூடிய பிரபஞ்சத்தில் இருந்தாலும், சரஸ்வதியை போல நான்கு அல்லது ஐந்து பெரும்கொத்துகள்தான் இருக்கும் என்று கூறப்படுகிறது.

ஆயிரக்கணக்கில் சூரியன்கள், கோடிக் கணக்கில் நட்சத்திரங்கள், கோள்கள், இதர அமைப்புகள், வாயுக்கள், இருள் ஆற்றல் மற்றும் அறிந்திரமுடியாத விஷயங்கள் பல சரஸ்வதியில் இருக்கலாம்.

இப்படி ஒரு சாதனையை நிகழ்த்தி நமக்குப் பெருமை சேர்த்துள்ள இந்திய வான வியலாளர்களுக்குப் பூங்கொத்து நீட்ட வேண்டிய தருணம் இது!

**-நிவேதிதா.**

# முக்கிய அறிவிப்பு



## S. சார்லஸ்

மக்கள் விசாரணை இதழில் கடலூர் மாவட்ட நிருபராக பணியாற்றி வந்த இவரின் பணி நியமன ஆணை (Declaration) ரத்து செய்து, 31-08-2017 அன்று முதல் பணி நீக்கம் செய்யப்படுகிறது.

இவர் கடந்த ஆறு மாத காலமாக பத்திரிகையில் தொடர்பின்றி இருப்பதால் ஆசிரியர் குழுவில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இவரிடம் மக்கள் விசாரணை இதழின் தொடர்பாக எந்த தொடர்பும் வைத்துக்க கொள்ள வேண்டாம் என்று அறிவுறுத்தப்படுகிறது.

**D. நாகராஜபெருமாள், S. யோவான் ஜான்** கோவை மாவட்டம்.

**S. ரமேஷ்** காஞ்சிபுரம் மாவட்டம். **பெலிக்ஸ் ஆரோக்கியதாஸ்** புதுவை மாநிலம்.

ஆகிய இவர்களை 31-08-2017 அன்று முதல் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளோம். மக்கள் விசாரணை இதழின் தொடர்பாக எந்த தொடர்பும் வைத்துக்ககொள்ள வேண்டாம் என்று அறிவுறுத்தப்படுகிறது.

**- நிர்வாக ஆசிரியர்**
(மக்கள் விசாரணை)



# உரிமைப் போராட்டத்தை ஒடுக்கும் சக்திகள்...

மே 19-ல் கதிராமங்கலம் மக்கள் ஒன்று திரண்டு ஓஎன்ஜிசி நிறுவனம் இங்கு என்ன செய்யப்போகிறது என்று கேட்டுப் போராட்டத்தில் இறங்கினார்கள். மக்களுக்கு ஆதரவாக மீத்தேன் திட்ட எதிர்ப்புக் கூட்ட மைப்பு ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் த. ஜெயராமன் கேள்வியெழுப்பினார். வருவாய்த் துறையினரும், காவல் துறையினரும் பொது மக்களை சமாதானம் செய்ய முயற்சித்தனர். ஓஎன்ஜிசி அதிகாரிகளோ நாங்கள் வழக்கமான பராமரிப்புப் பணிகளைத்தான் செய்கிறோம் என்றார்கள்.

ஆனால், கதிராமங்கலம் மக்கள் சமாதானம் ஆகவில்லை. மே 25 அன்று கும்பகோணம் உதவி ஆட்சியர் அலுவலகத்தில் அமைதி பேச்சு வார்த்தை நடந்தது. அப்போது ஓஎன்ஜிசி நிர்வாகம், மீத்தேன் எடுக்கவில்லை, பூமியி லிருந்து கச்சா எண்ணெய் எடுக்கும் குழாயில் கசிவு ஏற்பட்டதால் குழாய்களை மாற்றவுள் ளோம். வேறு எந்தப் பணியிலும் ஈடுபடவில்லை என உத்தரவாதம் கொடுத்தது.

கதிராமங்கலம் போராட்டம் தொடர்பாக தொடர்ந்து ஒரு கேள்வி எழுப்பப்பட்டு வரு கிறது. ஏற்கெனவே எண்ணெய் எடுக்கப்பட்டு வரும் இடம், அங்கு ஆழ்குழாய் பதிப்பதைத் தடுப்பதற்கு மக்கள் ஏன் எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும்? இந்தக் கேள்விக்கான பதில் தெரியா மல் மக்களின் அச்சத்தைப் புரிந்துகொள்ள முடியாது. தஞ்சாவூர் மாவட்டத்தின் வடகிழக்கு எல்லையில் உள்ள கதிராமங்கலத்தின் மக்கள் தொகை 7,000. திருப்பனந்தாள் ஒன்றியத் திலேயே அதிக மக்கள்தொகை கொண்ட ஊர்.

கடந்த 2002-ல் இப்பகுதியில் எண்ணெய் வளம் இருப்பதை ஓஎன்ஜிசி நிறுவனம் கண்ட றிந்தது. இதற்காக இக்கிராமத்தில் மூன்று இடங்களில் எண்ணெய்க் கிணறு அமைத்தது. நருவெளியில் அமைக்கப்பட்ட எண்ணெய்க் கிணறு, சில ஆண்டுகளுக்கு முன் அங்கு எண் ணெய் வளம் இல்லை எனக் கூறி மூடப்பட்டது. கடைவீதியில் உள்ள 7-ம் எண் எண்ணெய்க் கிணறும், பந்தநல்லூர் சாலையில் உள்ள 35-ம் எண் எண்ணெய்க் கிணறும் தற்போது செயல் பட்டுவருகின்றன. பூமிக்கடியிலிருந்து உறிஞ் சப்படும் கச்சா எண்ணெய், ஆறு அடி ஆழத்தில் பதிக்கப்பட்டுள்ள இரும்புக் குழாய்கள் மூலம் குத்தாலத்தில் உள்ள சுத்தகரிப்பு நிலையத்துக்கு அனுப்பப்படுகிறது.

கதிராமங்கலத்தில் 2004 முதல் கச்சா எண்ணெய் உறிஞ்சப்பட்டுவருகிறது. ஆரம்பத் தில் எந்தச் சிக்கலும் இல்லை. ஆனால், கடந்த சில மாதங்களுக்கு முன் கதிராமங்கலத்தில் உள்ள குடிநீர்க் குழாய்களில் நீர் மஞ்சள்காவி நிறத்துக்கு மாற ஆரம்பித்தது. இந்நிலையில் கடந்த மே 17-ல் கடைவீதியில் உள்ள 7-ம் எண் எண்ணெய்க் கிணற்றுக்குத் தளவாடச் சாமான் களைக் கொண்டுவந்து குவித்தது ஓஎன்ஜிசி

நிறுவனம். இரவு பகலாக பெரிய பெரிய கிரேன்களும், வேலை ஆட்கள் தங்குவதற்கான கேபின்களும் வந்தபோதுதான் ஊர் மக்கள் என்ன ஏதுவென விசாரிக்க ஆரம்பித்தனர். ஏற்கெனவே ஊரில் தண்ணீர் வராமல் ஆழ் துளைக் கிணறுகளில் மஞ்சள் காவியாகத் தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது. இந்நிலையில், ஓஎன்ஜிசி 600 அடியிலிருந்து 1,000 அடிக்குக் குழாய் இறக்கப் போகிறார்கள், நிச்சயமாக இது ஷேல் மீத்தேனுக்கான ஆய்வுப் பணிதான் என்று என்று கதிராமங்கலம் கொதிப்படையத் தொடங்கியது.

மக்களை விரட்டியடித்த காவல் துறை கதிராமங்கலத்தையே தன்னுடைய கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்துவிட்டது. இந்த முறையும் பேராசிரியர் த. ஜெயராமன் உட்பட 10 பேர் கைதுசெய்யப்பட்டனர். வெகுண்டெழுந்த மக்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். கைதுசெய்யப்பட்டு சிறையில் உள்ள அனைவரையும் எவ்வித நிபந்தனையுமின்றி உடனடியாக விடுதலை செய்ய வேண்டும், ஓஎன்ஜிசி பணிகளை நிறுத்த வேண்டும், பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீரை வழங்க வேண்டும் ஆகியவைதான் மக்களின் கோரிக்கை.

கதிராமங்கலம் மக்களுக்கு ஆதரவாக, தஞ்சை மாவட்டத்தின் பல ஊர்களிலும் விவசாயிகள் ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றனர். ஆனால், விவசாயிகள் நெடுஞ்சாலைகளிலும் பேருந்து நிறுத்தங்களிலும் ஆர்ப்பாட்டம் நடத்துவதற்குக் காவல் துறை தொடர்ந்து அனுமதி மறுத்துவருகிறது.

கடந்த அக்டோபர் 14, 2013 அன்று, ஷேல் மீத்தேன் எனப்படும் வண்டல் மண் படுகையின் கீழிருக்கும் மீத்தேனை எடுப்பதற்கான கொள்கை முடிவை மத்திய அரசு அறிவித்தது. ஏற்கெனவே எண்ணெய் எடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ள ஓஎன்ஜிசி நிறுவனத்துக்கு, அதற்கென்று ஒதுக்கப்பட்டுள்ள இடங்களில் ஷேல் மீத்தேன் ஆய்வு செய்வதற்கும் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

ஓஎன்ஜிசி அமைக்கும் இந்த ஆய்வுக் குழாய்கள்வழக்கமான ஆய்வுக்குழாய்கள்போல, தரையில் செங்குத்தாகவே பதிக்கப்படும். இந்த ஆய்வுக் குழாய்ச் சோதனையில் ஷேல் மீத்தேன் இருப்பது கண்டறியப்பட்டால், அதைத் தொடர்ந்து 3 கி.மீ. ஆழத்துக்குச் செங்குத்தாகக் குழாய்கள் இறக்கப்பட்டு, அங்கிருந்து பக்கவாட்டில் குழாய்கள் அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்படும். அதன் பிறகு நீரியல் விரிசல் முறையில் மணல், நீர், ரசாயனக் கலவைகளைப் பயன்படுத்தி ஷேல் மீத்தேன் எடுக்கும் பணிகள் தொடங்கும்.

இந்த நிலையில் ஜூன் 1 அன்று நள்ளிரவு கதிராமங்கலம் முழுவதும் நூற்றுக் கணக்கான காவல் துறையினர் குவிக்கப்பட்டனர். அறிவிக்கப்படாத ஊரடங்கு நிலை அங்கு நிலவியது. மக்கள் தெருவுக்கு வந்தால், கைதுசெய்யச் சொல்லி மேல் அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளதாகக் காரணம் சொல்லப்பட்டது. அறிவிப்பை மீறி, தெருவுக்கு வந்த பெண்களும், இளைஞர்களும் கைதுசெய்யப்பட்டனர். இதையடுத்து கதிராமங்கலத்தைச் சேர்ந்த மக்கள் மறுநாள் ஆர்ப்பாட்டம், கடையடைப்பு என்று போராடத் தொடங்கினார்கள். அப்போராட்டத்தில்தான் பேராசிரியர் ஜெயராமன் உள்ளிட்ட 10 பேரைக் காவல்துறை கைதுசெய்து கும்பகோணம் கிளைச் சிறையில் அடைத்தது.

அதன் பிறகு, மக்கள் ஊருக்கு வெளியே ஓடத்தோப்பு என்ற இடத்தில் ஒன்று கூடினார்கள். கும்பகோணம் உதவி ஆட்சியர் பேச்சு வார்த்தை நடத்தி, பாதிப்பு ஏதும் இல்லை என்று வாக்குறுதியை வழங்கிய பின்னரே அவர்கள் ஊருக்குத் திரும்பினார்கள். ஜூன் 5 வரை கதிராமங்கலம் தனித் தீவானது. யாரும் அந்த பகுதிக்குச் செல்ல முடியவில்லை. அவ்வூரைச் சுற்றி 21 இடங்களில் காவல்துறை அரண்களை அமைத்திருந்தது. யாரையும் உள்ளே அனுமதிக்கவில்லை. பெ.மணியரசன், பி.ஆர்.பாண்டியன் ஆகியோர் கதிராமங்கலத்தின் நிலையறியச் சென்றபோது கும்பகோணத்திலேயே கைதுசெய்யப்பட்டனர்.

மக்களின் அச்சத்தைப் போக்காமல், அவர்களின் நியாயமான கேள்விகளுக்கு உரிய முறையில் பதில் சொல்லாமல் எந்தவொரு போராட்டத்தையும் முடிவுக்குக் கொண்டுவர முடியாது. நிலக்கரி மீத்தேன் திட்டத்துக்கு அனுமதியில்லை என்று காலம் தாழ்ந்தேனும் தமிழக அரசு உறுதியான ஒரு முடிவை அறிவித்தது. ஷேல் மீத்தேன் தொடர்பாகவும் அப்படியொரு அறிவிப்பைத்தான் தஞ்சை விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

**- எஸ்.சரவணன்**

# சிந்தனை முத்துக்கள்

## தன்மானம்

என்னை மதிக்காதவர்களை
நானும் மதிப்பதில்லை
அதற்கு நீங்கள்
வைக்கும் பெயர்
தலைக்கணம் என்றால்
நான் வைக்கும் பெயர்
தன்மானம்

**நெல்லின் ஆடையை
களைந்தால் அரிசி..**

அந்த அவமானம் தாங்க முடியாமல்
அரிசி செத்து போனால் சோறு..

இந்த சோகத்த பார்த்து கோழி
செத்து அரிசியோட அடக்கம்
செய்தா பிரியாணி
அவ்வளவுதாங்க வாழ்க்கை!!!



## தாய்மை

பாதிசாப்பாட்டின்போது எழுந்து
கை கைழுவி குழந்தைக்கு
ஆய் கழுவி கொஞ்சமும்
அருவருப்பின்றி மீண்டும் சாப்பிட
அமரும் தாய்மைதான் தாய்!

## இழப்பு..

Hyprid பழம்
Hyprid மரம் இதெல்லாம்
உடம்புக்கு கெடுதல்னு
தெரிஞ்ச உங்களுக்கு
கலப்பு திருமணமும் Hyprid
மாதிரினு ஏன்டா தெரிய
மாட்டுங்குது?

## வெளிநாடு வேலை

உழைக்க வேண்டிய
வயசு இதுதாண்டா என்று
விமானம் ஏறி வந்தோம்..!
வாழ வேண்டிய வயது
இதுதாண்டா
என்று வேதனை
பட்டோம்...!!

## வெட்கம் தமிழா! வெட்கம்!!

அன்னையினை
இழிவு செய்யும் தமிழா!
வீட்டில் அருந்தமிழை
கொலை செய்யும் தமிழா!
மழை நீரை வீணடித்து
உயிர் நீருக்கு கையேந்தும் தமிழா!
உரிமைக்காக போராடி
உதை வாங்கும் தமிழா!
விண்வெளியில்
ஓசோனை கெடுத்தாயே!
உன் இனத்தையும்,
உன் தேசத்தையும்
அலட்சியத்தால் ஊன்றுகோல்
ஊன வைத்தாய் தமிழா!

## என்ன பேச்சு இது

B.E., பட்டதாரிகள்
உள்ள வீடுகளுக்கு
ரேசன் கிடையாது
தமிழக அரசு!
முன்னயெல்லாம் B.E. படிச்சா
வேலைதான் கிடைக்காது
இப்ப சோறு கூட கிடைக்காதுனு
சொல்றாங்க பட்டதாரிகள்



## என்ன கொடும சார்...

ஜெயலலிதாவுக்கு
ஓட்டுப் போட்டா
ஓ.பி.எஸ்., இ.பி.எஸ்.ன்னு
வராங்க...
ஓவியாவுக்கு
ஓட்டுப்போட்ட
ஜூலியும் ஆர்த்தியும்
வராங்க
என்ன கொடும சார் இது...



இன்க்கிரிமெண்ட் கொடுன்னு கேட்டா
என்னடா வேலை செஞ்சன்னு
கேட்கிறாங்க, சரின்னு லீவு கேட்டா
நீ இல்லாம கம்பனி எப்படி
நடக்கும்னு சொல்றாங்க...

## கேள்வியும் பதிலும்

ஆசிரியர் - ஏன்டா லேட்டு
மாணவன் - இன்னிக்கு
ஆட்சி கலைஞ்சிடும்
லீவு விடுவாங்கன்னு
நெனச்சேன் சார்.
ஆசிரியர் - ஆறு மாசமா
இததான்டா
சொல்லிக்கிட்டு இருக்க!

## தாகம்..!

எங்கிருந்தோ எடுத்துவரப்பட்ட தண்ணீரில்
எழுதியிருப்பது பொங்கு உலையின் புன்னகை
பூப்பெய்தியவளின் நீராட்டு ஆலய தீர்த்தத்தின்
புனிதம் விக்கல்களின் வெளிநடப்பு
மற்றும் புறாக்களின் தாகம்!

## தீர்வு!

தண்ணீர் பிரச்சனைக்கு
ஒரே தீர்வு நதிகள்
இணைப்புதான்,
விஜயகாந்த் இன்னிகைக்கு
சீக்கிரமே பேப்பர
படிச்சீங்களா கேப்டன்.

## நட்பு..!

பெரிதா ஒரு சண்டை
But குட்டியா ஒரு Sorry
சின்னதா ஒரு கோபம்
But செல்லமா ஒரு சிரிப்பு
கொடுமையான ஒரு பிரிவு
But இனிமையான
ஒரு சந்திப்பு இதுதாங்க
உண்மையான நட்பு

## முடியுல சாமி..

இரயில் நிலையத்தில்
ஏன் கேமரா வைக்கவில்லை
நீதிமன்றம் கேள்வி?
ரயில் கக்கூஸ்ல முடியல்ல..
ஒரு சொம்ப வையுங்க
அப்புறம் கேமரா
வைக்கலாம்

## யாரு அது..?

நாட்டில இருக்க அத்தனை பேரும்
மதுவுக்கு எதிரா போராடுறாங்க...
அப்போ இவ்வளவு நாளா யாருதான்டா
குடிச்சது.... தெரியாமத்தான் கேக்கறேன்?



# இருப்பது உண்மையான சுதந்திரமா?

நாடு முழுக்க ஒரே வரி என்ற பெயரில், மாநிலங்களின் வரிவிதிப்பு அதிகாரத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து, மாநிலங்களின் பொருளாதார இறையாண்மையை நொறுக்கும் 'பொதுச் சரக்கு மற்றும் சேவை வரி'யைக் கொண்டுவரும் முனைப்பில் மோடி அரசு இருந்தபோது, அதைக் கடுமை யாக எதிர்த்த ஜெயலலிதா, தன்னுடைய உரையின் மையப் பொருளாகப் பொருளாதாரச் சுதந்திரத்தை உள்ளடக்கினார். சுதந்திரப் போராட்டத்தில் தமிழகத்தின் நெடிய பங்களிப்பைப் பட்டிய லிட்ட அவர், முத்தாய்ப்பாகக் கூறினார், "சுதந்திரம் என்பது பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம், நம்மை நாமே ஆட்சி செய்துகொள்ளும் சுதந்திரம் என்பதோடு நின்று விடுவதல்ல. உண்மையான சுதந்திரம் பொருளாதாரச் சுதந்திரத்தில் இருக்கிறது!"

இரண்டாவது, அதற்கும் ஒரு மாதம் முன்பு - 2016 ஜூலை 16 அன்று - டெல்லியில் நடை பெற்ற மாநிலங்கள் இடை மன்றக் கூட்டத்தில் அவர் வாசிக்க அனுப்பியிருந்த உரை.

மாநிலங்களின் உரிமைகள் மீதான மத்திய அரசின் தாக்குதல்களை இந்த உரையில் பட்டி யலிட்ட ஜெயலலிதா, 'மருத்துவப் பொது நுழைவுத் தேர்வு ஒரு சமூக அநீதி' என்று சாடிய தோடு, 'மாநிலங்களின் பட்டியலுக்குள் கல்வி மீண்டும் கொண்டுவரப்பட வேண்டிய நேரம் இது' என்றும் குறிப்பிட்டார்.

மேலும், மத்திய - மாநில உறவுகள் எப்படி இருக்க வேண்டும் என்ற நீதிபதி எம்.எம்.பூஞ்சி குழுவின் பரிந்துரைகளை முன்வைத்து ஜெய லலிதா குறிப்பிட்டிருந்த பல கருத்துகள் மாநிலங் கள் உரிமை சார்ந்த திராவிடக் கட்சிகளின் பிடிமானத்தின் நீட்சி என்பதோடு, மாநிலங்கள் உரிமையில் அவருக்கு இருந்த அக்கறையையும் துல்லியமாகப் பிரதிபலிக்கின்றன.

ஜெயலலிதா தன்னுடைய மரணம் குறித்தும் மரணத்துக்குப் பிந்தைய தன்னுடைய கட்சியின் எதிர்காலம் குறித்தும் ஏதேனும் யோசித்திருந் தாரா என்று நமக்குத் தெரியாது. பதவி அதிகார வெறியில் அவருடைய வாரிசுரிமைக்குப் போட்டா போட்டி நடத்திக் கொண்டிருப்பவர் கள் எவரும் நாளது தேதி வரை ஜெயலலிதா வின் உயில் என்று எதையும் நம்மிடம் காட்ட வில்லை. அதேசமயம், கடைசிக் காலத்தில் நல்ல உடல்நிலையுடனும் தீர்க்கமான மன நிலை யுடனும் அவர் எழுதிய / ஆற்றிய உரைகளை ஜெயலலிதாவின் அரசியல் மரண சாசனமாகக் கருத முடியும்.

முதலாவது, 2016, செப்டம்பர் 22 அன்று மருத்துவ மனையில் அனுமதிக்கப்படுவதற்கு ஒரு மாதம் முன்பு - ஆகஸ்ட் 15 அன்று அவர் ஆற்றிய சுதந்திர தின உரை.

தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசின் 'கூட்டுறவுக் கூட்டாட்சி' முழக்கத்தை வர வேற்கிறோம். தேச வளர்ச்சியில் மாநிலங்கள் சம பங்காளிகளாக ஏற்கப்பட வேண்டும். மாநில அரசுகள் வலுவாக இருந்தால்தான் மத்திய அரசு

வலுவாக இருக்க முடியும். மாநிலங்களுக்குப் போதிய அதிகாரம் வழங்கப்படாவிட்டால், இது வெற்றுக் கோஷமாகவே இருக்கும். மாநிலங்களின் வேறுபட்ட பொருளாதாரச் சூழ்நிலைகளைக் கருத்தில்கொள்ளாமல் ஒரே மாதிரியான நிர்வாக நடைமுறைகளைத் திணிக்க இந்தக் கூட்டுறவுக் கூட்டாட்சி கோஷம் பயன்படுத்தப்படக் கூடாது.

மாநிலங்கள் இடை மன்றம் வெறும் சம்பிரதாயச் சந்திப்புக்கான இடமாக இருக்கக் கூடாது. மத்திய அரசுக்கும் மாநிலங்களுக்கும் பரஸ்பரம் பலன் தரக் கூடியவை குறித்து விவாதிக்கும் களமாக இருக்க வேண்டும்.

பூஞ்சி குழுவின் பரிந்துரைகளில், 'பொதுப் பட்டியலில் உள்ளவற்றைச் சட்டமியற்றுவதில் கட்டுப்பாடு தேவை' என்ற பரிந்துரை வரவேற்கப்பட வேண்டியது. 'பொதுப்பட்டியலில் உள்ளவை மீது சட்டம் இயற்றுவதாக இருந்தால், மாநிலங்களுடன் ஆலோசனை கலக்க வேண்டும்' என்ற பரிந்துரையும் அப்படியே.

கல்வியை மாநிலப் பட்டியலுக்கே மாற்றுவதற்கு இதுவே உரிய தருணம். சுற்றுச்சூழல், சூழலியல், பருவநிலை மாற்றம் உள்ளிட்டவை மத்தியப் பட்டியலுக்கு மாற்றப்படுவது பிற்போக்குத்தனமானது. வனம், வனவுயிரினங்கள் 42-வது திருத்தம் மூலம் பொதுப் பட்டியலுக்கு மாற்றப் பட்டது. அதைப் போல சுற்றுச்சூழல், சூழலியல், பருவநிலை மாறுதல் போன்றவையும் பொதுப் பட்டியலில்தான் இடம்பெற வேண்டும், மத்தியப் பட்டியலில் அல்ல!

இப்படி மத்திய - மாநில உறவு தொடர்பான விவாதத்தின், உரிமைப் பிரச்சினையின் மையப் புள்ளியில் கல்வியையும் மருத்துவப் பொது நுழைவுத் தேர்வையும் ஜெயலலிதா கொண்டு வந்து நிறுத்தியதற்கான காரணம் உண்டு. ஏனென்றால், திராவிட இயக்கத்தின், இரு திராவிடக் கட்சிகளின் மைய ஆதாரக் கொள்கையான சமூக நீதிக் கொள்கையோடும் மாநிலங்கள் உரிமையோடும் பிணைக்கப்பட்ட விவகாரம் இது. நூறாண்டுகளுக்கு முன், மருத்துவப் படிப்புக்கான தகுதிகளில் ஒன்றாக 'சம்ஸ்கிருதம் படித்திருக்க வேண்டும்' என்றிருந்த சூழலை அன்றைய நீதிக்கட்சி முடிவுக்குக் கொண்டுவந்ததோடு இன்றைய மருத்துவப் பொது நுழைவுத் தேர்வுத் திணிப்பை ஒப்பிட்டால், இந்த விவகாரம் திராவிட இயக்க வரலாற்றிலும் தமிழகத்தின் வரலாற்றிலும் எவ்வளவு பெரிய பின்னடைவு என்பதை உணர முடியும்



ஜெயலலிதாவின் மரணத்துக்குப் பின், அதிகார வெறியில் தங்களுடைய பதவிக்காக அடுத்தடுத்து மாநிலங்களின் உரிமைகளைப் பணயம் வைத்து சூதாடிவந்தவர்களின் கையாலாகாத்தனத்தின் உச்சமே இன்றைக்கு, 'மருத்துவப் பொது நுழைவுத் தேர்வு' விவகாரத்தில் தமிழகத்துக்குக் கிடைத்திருக்கும் அரசியல் தோல்வி. ஜெயலலிதாவின் வார்த்தைகளின் படியே தமிழக மாணவர்களுக்கு இழைக்கப் பட்டிருக்கும் அநீதி.

மிகப் பெரிய சமூக அநீதிக்கு இன்றைய ஆட்சியாளர்கள் துணை போயிருக்கிறார்கள். இதோடு முடியப்போவதில்லை; இவர்கள் தங்கள் அதிகார சுகத்துக்காக எதையும் இழக்கத் தயங்க மாட்டார்கள் என்பதையே நடக்கும் காட்சிகள் பகிரங்கப்படுத்துகின்றன.

மக்களோடு சேர்ந்து தமிழகத்தின் எல்லா எதிர்க்கட்சிகளும் ஒருமித்த குரலில் அரசுக்குத் துணை நின்ற விவகாரம் இது. மாநிலத்தில் உள்ள பலம் மட்டும் இன்றி, மக்களவையிலும் 37 உறுப்பினர்களுடன் நாட்டின் மூன்றாவது பெரிய கட்சியாக அமர்ந்திருக்கிறது அதிமுக. இவ்வளவு பலமான சூழலிலிருந்தும் மாநிலத்தின் உரிமையைப் பாதுகாக்க முடியாதவர்களுக்கு, டெல்லியிடம் பேரம் பேசத் தெரியாதவர்களுக்கு, திராவிட இயக்கத்தின் மைய ஆதாரக் கொள்கையையே பறிகொடுத்து நிற்பவர்களுக்குப் பதவி எதற்கு?

**பழனிசாமி - பன்னீர்செல்வம், பதவி விலகுங்கள்! மக்களைச் சந்தியுங்கள். ஒரு அரசியல்வாதிக்கான உண்மையான அதிகாரம் மேலிருந்து வழங்கப்படுவது அல்ல; கீழிருந்து அளிக்கப்படுவது என்பதை உணர்த்த தமிழக மக்கள் காத்திருக்கிறார்கள்!**

**- வீ.அருணாசலம்**



ஆ. மவுரியன்

சரித்திரத் தொடர் 8

## தமிழ் மண்ணின் வீர வரலாறு

# மாவீரன் மருதநாயகம்

ஜூலை மாத தொடர்ச்சி....

**மீண்டும், மீண்டும் ஆங்கிலேயர்கள் சளைக்காமல் மதுரையை குறிவைத்து போரிட்டனர். நவீன ஆயுதங்களை இங்கிலாந்திலிருந்து வரவழைத்தனர்.**

*1764* ஜூன் மாதம் தொடர்ந்து நடைபெற்ற போரில் ஆங்கிலப்படை தோல்வியை சந்தித்தது. ஆங்கிலேயர்கள் புறமுதுகிட்டு ஓடியதோடு, சமாதானக் கொடியையும் ஏற்றினர். செய்தி கேட்டு அலறினார் ஆற்காட் நவாப்!

அதே நேரம் மதுரை மற்ற பகுதிகளுடன் துண்டிக்கப்பட்டதாலும், போரினால் ஏற்பட்ட நிர்வாக சீர்குலைவினாலும் பெரும் இழப்பு ஏற்பட்டது. கோட்டையில் உணவுப் பற்றாக் குறை ஏற்பட்டதால், அது மருதநாயகத்திற்கு பெரும் இன்னலை ஏற்படுத்தியது. மருதநாயகம், சரண் அடைய விடுக்கப்பட்ட வேண்டுகோளை நிராகரித்ததுடன் கடைசி சொட்டு ரத்தம் இருக்கும் வரை தாய் மண்ணை விட்டுக் கொடுக்க மாட்டேன் என்று கர்ஜித்தார்.

போரினால் வெல்ல முடியாது என்பதை உணர்ந்த எதிரிகள் தந்திரங்களையும், வஞ் சகங்களையும் கையாண்டனர். கான்சாஹிபின் அமைச்சர்களில் ஒருவரான சீனிவாசராவை வலையில் வீழ்த்தினர். இதற்கு பின்னணியில் சிவகங்கை மன்னரின் தளபதியான தாண்ட வராயன் இருந்தான். பொன்னுக்கும், பொருளுக்கும் ஆசைப்பட்ட சீனிவாசராவ் மூலம் மெய்க்காவலர்களான பாபாசாஹிப், சேகுகான் உள்ளிட்டோரையும், பிரதான தளபதியும், பிரெஞ்சு அதிகாரியுமான மார்ச்சந்த்தையும் துரோக வலையில் இணைத்தனர்.

மருதநாயகம் தன் குடும்பத்தோடு தப்பி செல்ல விருப்பதாகவும், அதன் பிறகு உங்கள் கதி அதோ கதிதான் என்றும் இவர்களிடம் அவதூறு கூறப்பட்டது. அவர்கள் மருதநாயகத் தின் மீது சந்தேகம் கொண்டனர். இதைத்தான் ஆங்கிலப்படை எதிர்பார்த்தது. அது நடந்தது. கான்சாஹிப் மருதநாய கத்தை பிடித்துக் கொடுத்தால், பொதுமன்னிப்பும், சலுகைகளும் உங்களுக்கு வழங்கப்படும் என்று பேரம் நடந்தது. திட்டம் தயாரானது.

மருதநாயகத்தை யாராலும் அவ்வளவு எளிதில் நெருங்க முடியாது. அடக்க முடியாது. பிடிக்க முடியாது. போர் யானையை எப்படி முடக்க முடியும்? அவரை எப்போதும், கெடுபிடி இன்றி சந்திக்க கூடிய அந்த நால்வரும் இப்போது எதிரிகளின் கையில்! இதை அறியாதவராக மருதநாயகம் இருந்தார்!

அது ரமலான் மாதம் என்று சில வரலாற்று ஆசிரியர்கள் எழுதியிருக்கிறார்கள். *13.10.1764* அன்று கோட்டைக்குள் தனியறையில் அவர்

தொழுதுக் கொண்டிருந்த போது துரோகிகள் நுழைந்திருக்கிறார்கள். தனது நம்பிக்கைக் குரியவர்கள் என்பதால் அவர் தயார் நிலையில் இல்லை. அவர்கள் பாய்ந்து மருதநாயகத்தை அமுக்கி பிடித்தனர். அவர் சற்றும் எதிர்பார்க்க வில்லை. தொழுத நிலையில் இருந்த மருத நாயகத்தை சிறைபிடித்தனர்.

அந்த மாவீரன் அப்போது நம்பிக்கை துரோகிகளின் முகத்தை பார்த்து "என்னை கொன்று விடுங்கள், எதிரிகளிடம் ஒப்படைத்து விடாதீர்கள்" என்று கதறியுள்ளார். எதிரிகளிடம் அடிமைப்படுவதை, அவர் அப்போதும் விரும்ப வில்லை. ஆம். மாவீரர்கள் மண்டியிடுவதில்லை! 700 வீரர்களின் பாதுகாப்புடன் கண்களை கட்டி, ஆற்காடு நவாபிடம் கொண்டு செல்லப் பட்டார். மருதநாயகம் கைதுக்கு பிறகு மூன்று நாட்கள் பட்டினி! அவரது மகனும், மனைவியும் திருச்சி சிறையில் பூட்டப்பட்டனர். அடுத்தநாள் மதுரை கோட்டையில் ஆற்காடு நவாபின் கொடி ஏற்றப்பட்டது.

சிறைபிடிக்கப்பட்ட மருதநாயகத்தை சித்ர வதைப் படுத்தினார்கள். ஆற்காடு நவாபை பார்த்து தலை வணங்க சொன்னார்கள். முடியாது என மறுத்தார் மருதநாயகம்! உணவு தட்டு களை எட்டி உதைத்தார். கைது செய்யப்பட்ட திலிருந்து தொடர்ந்து பட்டினி! ஆனாலும் மானமும், வீரமும் அவருக்கு உரமேற்றின.

மருதநாயகத்துக்கு என்ன தண்டனை? என விவாதிக்கப்பட்டபோது ஆங்கிலேயர்கள் தண்டனை எதுவுமில்லை என்றதும், ஆற்காடு நவாப் கோபமடைந்தார். அவரைதூக்கிலிடுங்கள் அல்லது என்னை கொல்லுங்கள் என அடிமை குரல் கொடுத்தார். ஆங்கிலெயர்களிடம் இருந்த நேர்மை, இரக்கம், கூட ஆற்காடு நவாபிடம் இல்லை. வேறு வழியின்றி ஆங்கிலேயர்கள் வரலாற்று பெருவீரனை தூக்கிலிட ஆணை யிட்டனர்.

15.10.1764 இந்திய விடுதலை போராட்ட வரலாற்றில் ஒரு கறுப்பு நாள்! அன்று மதுரைக்கு மேற்கே உள்ள சம்மட்டிபுரத்தில் உள்ள ஒரு மாமரத்தில் தூக்கிலிட கொண்டுவரப்பட்டார், மருதநாயகம். அவர் அப்போதும் கலங்கவில்லை. அந்த காட்சிகளை வரலாற்றாசிரியர்கள் வர்ணிக்கும் போது,

மருதநாயத்தின் முகத்தில் பயம் இல்லை. விழிகளில் கலக்கமில்லை. தாய்நாட்டின் விடுதலைக்காக உயிர்துறக்கிறோம் என்ற பெருமிதம் தெரிந்ததாக வரலாற்றுப் பக்கங்கள் பூரிக்கின்றன.

தூக்கிலிடப்பட்டதும் அவர் மரணிக்க வில்லை. மாறாக கயிறு அறுந்து விழுந்தது! அவர் உடலில் சதையும், எலும்புகளும், ரத்தமும் மட்டுமில்லை. தியாக குணமும், வீரத்தனமும் அல்லவா கலந்திருந் தது! எனவே, எடை தாங்கவில்லை!

புதிய கயிறு தயாரிக்கப்பட்டு மீண்டும் தூக்கிலிடப்பட்டார், அப்போதும் உயிர் பிரிய வில்லை. "நான் யோகாசனம் பயின்றவன். கழுத்தை உப்ப வைத்து, பல மணிநேரம் மூச்சை அடக்கும் ஆற்றல் கொண்டவன்" என்று தூக்கு கயிற்றில் சீறினார் மருதநாயகம். எதிரிகள் குலை நடுங்கினர்.

இறுதியாக, மூன்றாவது முறை நீண்ட நேரம் தூக்கில் தொங்கவிட்ட பிறகுதான் மாவீரனின் உயிர் பிரிந்தது. நாடு துயரில் மூழ்கியது! அன்று இரவு சில ஆங்கிலேய தளபதிகளின் கனவில் மருதநாயகம் வந்து மிரட்டியதாகவும் செய்தி பரவியது. அதன் பிறகு எங்கே; மீண்டும் உயிர் பெற்று எழுந்து விடுவாரோ என பயந்த ஆங்கி லேயர்கள் புதைக்கப்பட்ட அவரது உடலை மீண்டும் தோண்டியெடுத்தனர்.

தலை, கால், கை என பல பாகங்களாக வெட்டி யெடுக்கப்பட்ட அவர் உடல் பல்வேறு ஊர்களுக்குதனித்தனியாக அனுப்பப்பட்டு அடக் கப்பட்டது. ஆம், செத்த பிறகும் மருதநாயகத்தின் உடலை கண்டு ஆங்கிலேயர்களும், துரோகி ஆற்காடு நவாப் முகம்மது அலியும் நடுங்கியுள் ளனர். வெட்டப்பட்ட உடல்களை பொதுமக்கள் பார்வைக்கும் வைத்துள்ளனர்!

**அவரது உடலின் ஒரு பாகம் மதுரையருகே அவர் தூக்கிலிடப்பட்ட சம்மட்டி புரத்தில் அடக்கம் செய்யப்பட்டது. அங்கே இப்போதும் அவர் நினைவிடம் உள்ளது. அவரது தலை திருச்சியிலும், ஒரு கை தஞ்சாவூரிலும், இன் னொரு கை பெரியகுளத்திலும், ஒரு கால் திரு விதாங்கோட்டிலும், இன்னொரு கால் பாளையங் கோட்டையிலும், உடல் மதுரையிலும் அடக்கப் பட்டதாக கூறப்படுகிறது.**

# சிதம்பரம், தில்லை நடராஜர் ஆலயம்

இறைவர் திருப்பெயர் :
நடராசர், அம்பலகூத்தர்,
திருச்சிற்றம்பலமுடையார்.

இறைவியார் திருப்பெயர் :
சிவகாமி, சிவகாமசுந்தரி.

தல மரம் : தில்லை, ஆல்

தீர்த்தம் : சிவகங்கை, பரமானந்தகூபம், வியாக்ரபாத தீர்த்தம், பிரமதீர்த்தம், அனந்த தீர்த்தம் முதலியன.

வழிபட்டோர் : சேந்தனார்
அருள் பெற்றோர் மாணிக்கவாசகர், வியாக்ரபாதர்,

தேவாரப் பாடல்கள் :
மூவர் பாடல் பெற்ற தலம்.

**தல வரலாறு**

- 'கோயில்' என்று பொதுவாக வழங்கினாலே சைவத்தில் சிதம்பரம் நடராசப் பெருமானின் கோயிலைத்தான் குறிக்கும். ஊர்ப்பெயர் தில்லை; கோயிலின் பெயர் சிதம்பரம், இன்று ஊர்ப்பெயர் வழக்கில் மறைந்து, கோயிலின் பெயரே ஊர்ப் பெயராக வழங்கி வருகிறது.

- தில்லை மரங்கள் அடர்ந்த காடாக இருந்தமையால் தில்லைவனம் என்று பெயர் பெற்றது. (இம்மரங்கள் தற்போது சிதம்பரத்தில் இல்லை; ஆனால் இதற்கு அண்மையிலுள்ள பிச்சாவரத்திற்குப் பக்கத்தில் உப்பங்கழியின் கரைகளில் காணப்படுகின்றன.)

- இக்கோயிலுள் 'திருமூலட்டானம்' என்னும் தனிக்கோயில் ஒன்றுள்ளது. அர்த்தசாம வழிபாடு முடிந்தபின் எல்லாக் கோயில்களிலும் உள்ள சிவகலைகள் அனைத்தும் இந்த மூலத் தான லிங்கத்தில் ஒடுங்குவதாக ஐதீகம்.

- சிற்றம்பலம் உள்ளே செல்வதற்கு ஐந்து படிகள் - பஞ்சாக்கரப்படிகள் உள்ளன; இப்படி களின் இரு புறமும் யானை உருவங்கள் உள்ளன. பதினான்கு சாஸ்திரங்களில் ஒன்றை இப்படியில் வைத்தபோது,

இப்படிகளிலுள்ள யானைகளில் ஒன்று தன் தும்பிக்கையால் அந்நூலையெடுத்து நடராசப் பெருமான் திருவடியில் வைத்தமையால் அந்நூல் 'திருக்களிற்றுப்படியார்' என்ற பெயர் பெற்றது.

## அற்புத ஆலயங்களின் ஸ்தல வரலாறு

ஆன்மிகத் தொடர்-5



**சிறப்புக்கள்**

- இறைவன் - விராட்புருஷனின் வடிவத்தில் திருவாரூர் மூலாதாரமாகவும், திருவானைக்கா ‘உந்தி ‘யாகவும், திருவண்ணாமலை ‘மணிபூரக’ மாகவும், திருக்காளத்தி ‘கழுத்தாகவும்’, காசி ‘புருவமத்தி’ யாகவும், சிதம்பரம் ‘இருதயஸ்தான’ மாகவும், சொல்லப்படும்.

- பஞ்சபூத தலங்களுள் இது ‘ஆகாயத் ‘ தலம்.

- பஞ்சசபைகளுள் இது கனகசபை, பொற் சபை, சிற்சபை ஆகும்.

- இக்கோயிலுள், இறைவனின் ஐந்து சபைகளாகிய 1. சிற்றம்பலம், 2. பொன்னம்பலம் (கனகசபை), 3. பேரம்பலம், 4. நிருத்தசபை, 5. இராசசபை என ஐந்து மன்றங்கள் உள்ளன.

- “சிற்றம்பலம்” நடராசப்பெருமான் திருநடனம் புரிந்தருளும் இடம் - ‘தப்ரசபா’ எனப்படும் இவ்வம்பலத்திற்கு முதலாம் ஆதித்த சோழனின் மகன் முதற்பராந்தக சோழன் பொன் வேய்ந்தான் என்று திருவாலங்காட்டு செப்பேடு களும் ‘லெய்டன்’ நகரப் பெரிய செப்பேடுகளும் கூறுகின்றன. இவனுக்கு முன் இரண்யவர்மன், பொன்வேய்ந்தான் என்று கோயிற்புராணம் தெரிவிக்கின்றது.

- “பொன்னம்பலம் (கனகசபை)” நடராசப் பெருமான் அபிஷேகம் கொண்டருளும் இடம். இப்பொன்னம்பலத்தின் முகட்டை, முதலாம் ஆதித்தசோழன், கொங்குநாட்டிலிருந்து கொண்டுவந்த உயர்ந்த மாற்றுடைய பொன் னால் வேய்ந்தான் என்று சேக்கிழாரும், தில்லைக் கோயில் கல்வெட்டுப்பாட லொன்று சிறந்த சிவபக்தனும், படைத்தலைவனுமான மணவில் கூத்தனான காளிங்கராயன் என்பவன் பொன் வேய்ந்தான் என்றும் கூறுகின்றது.

- “பேரம்பலம்” இது தேவசபை எனப்படும். மணவில் கூத்தனான காளிங்கராயன் விக்கிரம சோழன் காலத்தில் இச்சபையைச் செம்பினால் வேய்ந்தான் என்று தில்லைக்கோயில் பாடலால் அறிவதோடு, பின்பு இப்பேரம்பலத்திற்கு பொன் வேய்ந்தவன் மூன்றாங்குலோத்துங்கச் சோழன் ஆவான்.

- “நிருத்த சபை” ஊர்த்தவ தாண்டவம் செய்தருளிய இடம் இதுவே.

- “இராச சபை” இஃது ஆயிரக்கால் மண்டப மாகும். சோழ மன்னர் மரபில் முடிசூடப் பெறு பவர்களுக்கு இம்மண்டபத்தில் முடிசூட்டு விழா நடைபெற்று வந்தது.



காக்களூர்
**த. துரைபாபு**

- வியாக்ரபாதர் (புலிக்கால்முனிவர்) மிகுதியான பற்றினால் பூசித்த ஊராதலின் பெரும் பற்றப்புலியூர் என்றும்; சித் + அம்பரம் (அறிவு - வெட்டவெளி) = சிதம்பரம் ஞானகாசம் என்றும்; பூலோககயிலாயம், புண்டரீகபுரம், சிதாகாசத்தலம் எனவும் இதற்குப் பலபெயர் களுண்டு.

- வைணவத்திலும் ‘திருச்சித்திரக்கூடம்’ என்று புகழ்ந்தோதப்படும் திருப் பதி.

- சந்தானாசாரியர்கள் முத்தி பெற்ற சிறப்புடையதுமாகிய பழம்பதி.

- மாணிக்கவாசகர் புத்தரை வாதில் வென்று ஊமைப் பெண்ணைப் பேசுவித்த பெரும்பதி.

- திருஞானசம்பந்தர் தில்லைவாழ் அந்தணர் களைச் சிவகணங்களாகக் கண்டது இப்பதியில் தான்.

- திருநீலகண்ட நாயனார் அவதரித்து வாழ்ந்தபதி.

- அவதாரத் தலம் : தில்லை (சிதம்பரம்).

- வழிபாடு : சங்கம வழிபாடு.

- முத்தித் தலம் : திருப்புல்லீச்சரம்

- குருபூசை நாள் : தை - விசாகம்.

- உமாபதிசிவம் ‘கொடிக்கவி’ பாடிக் கொடியேற வைத்த அதிசய தலம்.

- திருப்பல்லாண்டு பாடிச் சேந்தனார் தடைப்பட்ட தேரை ஓடச்செய்த மந்திரத்தலம்.

- இராசராசன் வேண்டுதலின்பேரில் நம்பி யாண்டார் நம்பிகளால் பொல்லாப்பிள்ளை யாரின் துணைக்கொண்டு, திருமுறைகளை வெளிப்படுத்திய தெய்விகத் தலம்.

- சேக்கிழார் பெருமானுக்குத் திருத்தொண்டர் புராணம் பாட அடியெடுத்துத்தந்து, அரங் கேற்றம் செய்யப்பட்ட அருமையான தலம்.

- நடராச சந்நிதிக்கான கொடிமரம் தங்கத் தகடு வேய்ந்ததாகும்.

- சிற்றம்பலம் - சிற்சபை நடராசப் பெருமா னுக்குப் பக்கத்தில் ‘சிதம்பர ரகசியம் ‘ உள்ளது.

## "வறுமை"

வெறும் அறிக்கைகளை
மட்டும் விடாமல்
அறக் கைகளை
நீட்டியிருந்தால்
வறுமை என்றோ
ஒழிந்திருக்கும்...

## காதல்....

என்றாவது ஒருநாள்
நீ என்னை பார்க்க
நேர்ந்தால் உன்
கணவனிடம் அறிமுகப்படுத்து
இவன் தான் என்னால்
சாகடிக்கப்பட்ட நடைபிணம் என்று

## அரசியல்...

கடலை கரை தொட்டு திரும்பும்
உங்களுக்கு தெரியுமா?
கரை தாண்டியும்
கழுவ வேண்டிய
அழுக்குகள் இங்கே
அதிகம் இருக்கிறது.

## ச்சே...

நிழல் தேடி அலையும்
போதுதான் மனிதன்
மண்டையில் உரைக்கும் ச்சே...
இங்கு ஒரு மரம் கூட
இல்லையே என்று,
இனியாவது புரிகிறதா?
மரத்த ஏன் வெட்டனும்
மழைக்காக ஏன்
வேண்டணும்...

## பாதை புதியது

நீ
செல்லும் பாதையில்
தடைகள் ஏதும்
இல்லையென்றால்
அது நீ செல்லும்
பாதை அல்ல
யாரோ ஒருவர்
சென்ற பாதை

- கவிஞர் நிவேதிதா



கதைகளில் வரும் பெயர்களும், நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழ்களில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மை தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரைகள் எழுத்தாளர்கள் சொந்தக் கருத்துக்களே. Press & Registration of Book Act-in ன்படி செய்திகள் தேர்வுக்கு ஆசிரியர் மட்டுமே பொறுப்பாவார். எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது.

MAKKAL VISARANAI Owned and Published by A. Mouriyan, from 3, Anna Veethi 1st Street, MGR Nagar, Chennai - 600 078. Printed by : S.Ali Mohammad Syeed, at J.M.Process, 22/49, Subedhar Hussain Street, Border Thottam, Royapettah, Chennai-14. Editor. **A. MOURIYAN,**

H. Sivaraman
80721 81052

A. Balachandar
98840 30705

aci

# Aloevera Cultivation India Pvt. Ltd.,

**Manufacture, Purchase & Sale**
**Export and Import of Aloe Vera products**

## 10 Health Benefits of Aloe Vera

- Provides relief from side-effects of radiotherapy done to treat cancer
- Beneficial in curing gum diseases and improving cardiovascular function



- Helps to prevent cancer
- Boosts immune system
- Relieves pain caused by arthritis
- Helps cure wounds and menstrual problems
- Provides relief from symptoms of acid reflux
- Useful in treating skin ailments and dermatitis
- Ensures proper functioning of digestive system
- Promotes hair growth and delays aging process

3/425, O.M.R. Kazhipattur- 603 103.
Kancheepuram District. Tamilnadu.
Email : aciindia2017@gmail.com

MAKKAL VISARANAI Tamil Monthly Regd. No. TN/CC(S) DN/461/16-18
Registered with Registrar of News Paper for India Under No. TNTAM 44870/2012
Posted at EGMORE RMS / 1 Patrika Channel Posted Date of Publication 15th of Every Month

